திராவிடநாடு



கேட்டீரா! சேதி!

கழுத்தை அறுத்துக் கொண்டால் கடவுள் தரிசனம் கொடுப்பார் என்று கருதினார் ஒரு ஆசாமி! அதனால், சங்கரர் என்று கூறப்படும் கடவுளை திருப்திசெய்ய அவர், கோவிலுக்குள் நுழைந்து கழுத்தை அறுத்துக் கொண்டிருக்கையில் மற்ற மக்கள் பார்த்து போலீசாருக்குத் தகவலைத் தெரிவித்தனர். இப்படிச் செய்தவர் ஒரு கிராமவாசியாம், ஜூலை 15, ஆமதாபாத்துக்கருகில், இச்சம்பவம் நடந்துள்ளது.

*

அதே 15-ந்தேதி தியாகராய நகர் உஸ்மான் சாலையிலுள்ள தருமையாதீனம் மடாலயத்தார், இந்து தர்மப் பிரசார சங்கத்தின் ஆண்டுவிழாவைக் கொண்டாடினார்கள். பக்தியின் அவசியம் குறித்து அமைச்சர் சுப்ரமணியம் பேசினாராம். அவரது குருநாதரான ஆச்சாரியார், பேசும்போது "கடவுள் பக்தியில்லையேல் ஒழுக்கம் நிலை நிற்காது. கடவுள் பக்தி எதற்கு என்று சிலர் கேட்கிறார்கள். பக்திதான் மிக முக்கியம். அறிவு அல்ல" என்று உபதேசம் அருளியிருக்கிறார், உலகுக்கு.

*

"நான் தினந்தோறும் கீதையில் சில சுலோகங்களைப் பிரார்த்தனை மேடையில் படிக்கிறேன். அவைகளை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தமிழில்தான் படிக்கிறேன். மக்கள் அறிந்த மொழி தமிழ் மொழி. அதில் கூறினால்தான் நாம் கூறுவது அவர்களது மனதில் பதியும். தாங்கள் கூறுவதுபோல, தமிழில் ஆர்ச்சனை செய்வதே நல்லது" என்று குன்றக்குடி அடிகளை நெல்லிக்குப்பத்துக்கருகில் சந்தித்த விநோபா தெரிவித்தாராம்.

*

புரோகிதத்தின் மூலம் வருகிற வருமானம் குடும்பத்தின் பொதுச்சொத்தாகாது; அதைச் சம்பாதித்தவருக்கே சேரும், என்று சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளான கோவிந்தமேனனும், பி. என். ராமசாமியும் ஒரு வழக்கில் தீர்ப்பளித்துள்ளனர். இதற்கு ஆதாரமாக, மனுஸ்மிருதியின் 206-வது சுலோகம், எடுத்துக் காட்டப்பட்டதாம்! சட்டங்கள்யாவும், காலத்துக்கேற்றபடி அமைக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள்—ஆனால் ஆட்சிபுரிவது எது கண்டீர்களா? மனுஸ்மிருதி! சூத்திரனுக்கு ஒரு நீதி வழங்கவேண்டும் என்று அறிவுறுத்தும் மனுஸ்மிருதி, நம்மை ஆள்கிறது!

*

ஜூன்மாதத்தில்2,16,668-14-6 ரூபாய் இந்திய நாணயங்களும், 773–12–0 ரூபாய் ஐதராபாத் நாணயங்களும், 443–15–0 ரூபாய் பொன்னும், 5,078–3–0 ரூபாய் எடை வெள்ளியும், வருமானம் வந்திருக்கிறதாம். திருப்பதி வாழ் வெங்கடேசப் பெருமாளுக்கு! பக்தர்களில் சிலர், பழைய ஜார்ஜ், விக்டோரியா, எட்வர்ட் ரூபாய்களையும் 962—8—0க்கு உண்டியலில் போட்டிருக்கிறார்கள்! இதோடு 134 ரூபாய்க்கு ஒரு புரோநோட்டும் இருந்ததாம். கடன் வாங்கிக் கொண்டு 'நாமம்' போட விரும்பினவர்கள் எழுதிக் கொடுத்த புரோ நோட்டை உண்டியலில் போட்டுவிட்டால், கோயில் நிர்வாகிகள் கோர்ட்டு மூலம் இப் பணத்தை வசூல் செய்துகொள்வார்களாம்!

*

பம்பாயிலுள்ள குருட்டுப் பிச்சைக்காரர்கள் ஒவ்வொரு வரும் மாதம் ரூ. 30 முதல் ரூ. 300 வரை சம்பாதிப்பதாக குருடர்கள் தேசிய சங்கம் தெரிவிக்கிறது. இந்தச் செய்தியைக் கேள்விப்படும் படித்த வாலிபர்களில் பலரும், என். ஜி. ஓக்களும் நிச்சயம் பெருமூச்சு விடத்தான் செய்வார்கள்!

*

"...சர்க்காரை நடத்தும் காங்கிரஸ் கட்சியைப் பாருங்கள்; காங்கிரஸ் கட்சி ஊழியரைப் பாருங்கள். தலைவர்களை நான் சொல்லவில்லை. காங்கிரஸ் ஊழியர்கள் முன்னைவிட இப்போது நன்றாக உடை உடுத்துகிறார்கள், சாப்பிடுகிறார்கள், நன்றாக இருக்கிறார்கள். புதுத் தொழில் செய்து சம்பாதிக்கிறார்களா? இல்லை! தொழில்களில் சம்பாதிக்கவில்லை. ஆனாலும் செலவழிக்கிறார்கள்! நீங்களே யோசித்துப் பாருங்கள்" — இராஜாஜி, தினமணி 28–5–56 சென்னை இதழ்.

இதன் பொருள் என்ன? — என்று கோபத்தோடு கேட்கிறது, 'ஜனயுகம்' என்கிற காங்கிரஸ் வார இதழ்.

*

'குவிஸ்லிங்' எனும் சொல்லை இப்போது பலர் மறந்திருக்கலாம்! ஆனால் இரண்டாவது உலகப் பெரும்போரின் போது இப்பெயர் எல்லோர் நாவிலும் அடிபட்டது. நாட்டைக் காட்டிக் கொடுக்கும வேலைக்கு, "குவிஸ்லிங் வேலை" என்று பெயரிட்டுப் பேசப்பட்டது. குவிஸ்லிங் அன்டோமூசேர் எனும் பெயர்கொண்ட இவன்தான், டச்சுக்காரர்களை ஹிட்லருக்குக் காட்டிக்கொடுத்தவன். டச்சுத் தேசிய சோஷியலிஸ்டுக் கட்சியின் உறுப்பினராகயிருந்த இவன், 1942-ல் நெதர்லாந்தின் ஆள்வோனாக நியமிக்கப்பட்டிருந்தான், இவனை 1946-மேயில், விசாரித்து மரண தண்டனை விதித்தார்கள். அவனுடைய உடல், ஹேக் நகரின் கல்லறையில் வைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்து இப்போது யாரோ அதைத் திருடிக் கொண்டு போய்விட்டார்களாம்; அதை, நாட்டைவிட்டு வேறெங்கும் கொண்டுபோய்விடாதபடி எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறதாம். இன்னாரெனத் தெரியாத ஒருவர் டெலிபோன் மூலம் ஒரு பத்திரிகைக்குத் தகவல் தரவே இந்த விஷயம் வெளியாயிற்றாம்.

★

ஆண்டுச் சந்தா ரூ. 7

மலர் 15 :: இதழ் 3
22—7—56

முடியுமய்யா, முடியும்!

"ஆகா! அப்படியா நடைபெற்றது. ஐயகோ! துடிக்கிறதே, என் நெஞ்சம். இருபத்தொருபேர் பிணமானார்களாமே! அக்கிரமம், அக்கிரமம். இதற்கொரு பரிகாரம் காணாவிடில், நான் மந்திரியாயிருந்து என்னபலன்? 'தேயிலைத் தோட்டத்திலே' என்று என் கட்சியினர் அந்தக் காலத்திலே பாடிய பாட்டு இன்னும் என் காதுகளிலே எதிரொலிக்கிறதே! பூச்சிக்கடிக்கும் கங்காணியின் சாட்டையடிக்கும் ஆளாகி, அவதிப்படும் தமிழர்களுக்கா இந்தக்கதி? ஏனைய்யா காமராஜ் எங்களுக்குத்தான் எத்தனையோ வேலை, அருகிருக்கும் இலங்கையில் நடப்பது, உமக்குத்தானே கவனமிருக்கவேண்டும். ஏன் எமக்கு எழுதக்கூடாது. எத்தனை தடவை, டில்லிக்கு வருகிறீர், போகிறீர். இந்த அக்கிரமத்துக்கு பரிகாரம் தேடுமாறு பண்டித நேருவிடம் வந்து சொல்லக் கூடாதா? இதைக் கூட இந்தக் கழகத்துக்காரர்கள், எமக்குத் தெரிவிக்கும்படியா விடுவது. படுகொலை! படுகொலை!!—என்று கழகத்தார் ஒட்டியிருக்கும் சுவரொட்டிகளைக் காணும் போது என் மனமன்றோ பதறுகிறது. இந்தக் கொடுமை போக்க மார்க்கம் ஒன்று காண்பேன். தமிழ் நாட்டிலிருந்து சென்றிருக்கும் எனக்கு இதைவிட வேறென்ன வேலை?", என்று கூறவில்லை அவர். மாறாக கேலி செய்துவிட்டுப் போயிருக்கிறார், அண்மையில் இங்கு வந்த டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்!!

நாம் வடநாட்டினரை வெளியேற்ற வேண்டும் என்று சொல்கிறோமே. அதைப்போல 'தமிழர்களும் அந்நியர்கள் தானே. அவர்களை வெளியேற்றுவோம், வேதனைப் படுத்துவோம்', என்று பண்டார நாயகா இலங்கையிலே செய்கிறாராம.

வடநாட்டினரை வெளியேற்ற விரும்புகிறோமா, அல்லது அவர் தம் சுரண்டலையா என்கிற பிரச்னையைக்கூட அவர் புரிந்து கொள்ளாதது பற்றி நமக்குக் கவலையில்லை. காலம் கருத்துக் குருடர்களுக்கும் பாடம் தரும்! ஆனால், கண்முன 'சுவரொட்டிகளை'க் கண்டதும் 'கேலி செய்யத் தானா, அவர் 'மூளை' முயன்றிருக்க வேண்டும்.

கழகத்தைப்பற்றி, அவர் கேலி செய்யட்டும்—புதிது ஒன்றுமில்லை நமக்கு இந்த ஏளனங்கள். ஆனால், அதற்கு வாய்த்த சந்தர்ப்பம் என்று இந்தச் சம்பவத்தையா, எடுத்துக் கொள்ள வேண்டும்.

இலங்கையிலே 21 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள்—கடைகள் சூறையாடப்பட்டன-வீடுகள் நிர்மூலமாயின—நெஞ்சு கொதித்த நிலையில் தமிழர்கள் உலவுகிறார்கள் — அவர் தம் மொழி குப்பை மேட்டுக்கு வீசியெறியப்பட்டுவிட்டது—கோரிக்கைகள் எதனையும் பண்டார நாயகா ஏற்கவில்லை— இது நீதியா! நேர்மையா! என்று கேளுங்கள், அமைச்சர்களே, கேளுங்கள் என்று நாம் முழக்கம் எழுப்பினால், 'கேட்கிறோம்' என்று கூறுவது, நல்லவர் செயல். 'இவர்களென்ன சொல்வது! இதோ நடவடிக்கை எடுத்து ஏழு நாட்கள் ஆகிவிட்டதே' என்பது புத்திசாலியின் சாமர்த்தியம். இரண்டுமில்லை இவர்களுக்கு! எனினும், சாவு வீட்டுக்குச் சென்ற சங்கீத வித்வான், ஒப்பாரியில் சுருதிச் சுத்தம் இல்லை—சாகித்யம் சரியாக இல்லை—தாளத்துக்கு ஒத்து வரவில்லை, என்றானாமே அதுபோல், ஏதோ கூறிவிட்டு ஏறிக்கொண்டு பறந்துவிட்டார், அமைச்சர் டில்லிக்கு!

காமராஜரும், இது குறித்து வாய் திறக்கக் காணோம்; அரசாங்க அலுவல்கள் அவருக்கு மெத்த அதிகம — ஆதலின், அவைகள் ஒவ்வொன்றையும் பைசல் செய்துவிட்டு, பிறகே இந்தப்பிரச்னையின் பக்கம் கருத்தைச் செலுத்துவார் என்று கருதவும் இடமில்லை. ஏனெனில் இராமநாதபுரம் முடிந்ததா, நெல்லை மாவட்டத்தில் யாராரைப் பிடிக்கலாம், தஞ்சையில் எத்தனைபேர் தேறும், என்று கணக்குப்பிள்ளை உத்யோகம் பார்ப்பதுதான் பெரிதாகி வருகிறது அவருக்கு:

இந்தக் கண்றாவியைப் பார்க்கிறபோது, 'தமிழா! உன் கதி இதுவா?' என்று கதற வேண்டியவர்களாயுள்ளோம். இலங்கைப் பண்டாரநாயகாவும், பண்டித நேருவும் இலண்டனில் சந்தித்து ஏதேதோ பேசினார்களாம்! ஆனால் தமிழர் தம் அவதி குறித்து எவ்வளவு

அக்கரை காட்டப்பட்டிருக்க வேண்டுமோ, அவ்வளவு காட்டப்பட்டதாகத் தெரியவில்லை. 'ஹலோ! கௌ ஆர்யூ...?' என்று குசலம் விசாரிப்பதுபோல 21-பிணங்கள் விழுந்த பிரச்னை, முடிந்திருக்கிறது.

இங்கிலையில், நமது சுவரொட்டியைக் கண்டு ஏளனம் செய்கிறார் கிருஷ்ணமாச்சாரியார்! வடநாட்டாரைத் துரத்த வேண்டும் என்று நாம் சொல்லுவதால்தான் இலங்கையரசு தமிழர்களைத் துரத்த வேண்டும் என்று காரியமாற்றுகிறதாம்!

இங்கே நமக்கு எத்துணைப் பிரயோசனமும் இன்றி, நம்மைச் சுரண்டிச் செல்வதையே நோக்கமாகக்கொண்டு வாழும் வடநாட்டினரையெல்லாம் விரட்டிவிட்டு! அதற்குப் பதிலாகக் கடல் கடந்து சென்று, ஆப்பிரிகாவிலும், அந்தமானிலும், மலேயாவிலும், பர்மாவிலும் இலங்கையிலும், இந்தோசீனத்திலும் கஷ்டமனுபவிக்கும் தமிழர்களைக்கொண்டு வந்து குடியேற்ற வேண்டும் என்கிற ஆவலால், விரட்டவேண்டும் என்று சொல்வதாகவே, வைத்துக்கொள்வோம். தவறென்ன இதில்!

எங்கிருந்தாலும் தமிழர்கள், நமது சகோதரர்கள் — ஆங்காங்குள்ள அரசில் அவர்கள் சுகவாழ்வைப் பெற முடியுமானால் அவர்களிருக்கட்டும்; இல்லையெனில் வரட்டும் இங்கு, வளமார் திராவிடத்தில் அவர்கள் வாழ இடமுண்டு என்கிற ஆசையால் அறைகூவி அழைக்கிறோம்! இதில் என்ன பிழையைக் காட்ட முடியும், அமைச்சர்?

"கேளுங்களய்யா, கேளுங்கள்! இவர்கள் கடல் கடந்து போனவர்களைக் கொண்டு வந்து மீண்டும் குடியேற்றுவார்களாம். அதற்காகத் தனிநாடு வேண்டுமாம். அதன் பெயர், திராவிடநாடாம்,' என்பதாக வேண்டுமானால் கேலி செய்யலாம்.

கேலியும், கிண்டலும் செய்வது எளிது; மக்களுக்கு வாழ்வளிக்க இவை போதாதே! மனசுத்தியும், மார்க்கம் கண்டு பணியாற்றும் பண்புமன்றோ வேண்டும்.

நாம்தான், வடவரை வெளியேற்றுவோம் என்று சொல்லுகிறவர்கள்! அதனால், பண்டாரநாயகா இப்படிச் செய்கிறார்!

கிருஷ்ணரும் அவரது குருநாதரும்தான், எல்லோரும் ஒன்றாக வாழ வேண்டும் என்று கூறுவோர்களாயிற்றே—அவர்களாவது, பண்டாரநாயகாவுக்கு உணர்த்தி, ஒற்றுமை மலரும் வழியினை ஏன் காட்டக்கூடாது?

பாரதம் ஒன்று! நாமெல்லாம் ஒன்று!—என்று இங்கு வேண்டுமானால், பல்லவி பாடலாம், பண்டாரநாயகாவிடமும், துங்குவிடமும் போய்ச் சொன்னால்; 'போய்யாபோ!' என்று முகத்திலறைவார்கள், அவர்கள். அது தெரிவதால், அங்குபோய் ஒற்றுமைக் குரலும், உலக சமாதானத்தையும், எடுத்துரைப்பதில்லை. இங்கு வரும்போது மட்டும், நமக்கு இதன் அருமைகளைக்கூறி வாயடைக்க முயலுகிறார்கள்,

திராவிடம் தனிநாடானல், நிச்சயம், கடல் கடந்து சென்று கண்ணீர் வடிக்கும் தமிழர் தம் குடும்பங்களை, ஆனந்தத்தோடு வரவேற்க நாம் தயங்கமாட்டோம்.

அதுமுடியுமா!—என்று, கேலிக் குரல் எழுப்பலாம், கிருஷ்ணமாச்சாரியார்.

அவருக்கும், அவர்தம் குழாத்தினருக்கும், 'முடியுமய்யா, முடியும்!' என்று எடுத்துக் கூறுவதற்கு நாம் தயங்கவில்லை.

★

விற்பனைக்குத் தயார்

டெமி சிலிண்டர், பர்பரேடிங், புரூப் மிஷின்கள், 3000 பவுண்ட் தமிழ், இங்கிலீஷ் எழுத்துகள், ஜாப் அச்சகத்திற்குத் தேவையான காலி, ஸ்டேண்டு கேஸ்கள், விற்பனைக்குத் தயார்.

விபரங்களுக்கு:—

ஏ. ஆர். பி. பிரபாத் பிரஸ்,
97, பிராட்வே, சென்னை-1.

வழிபெறவில்லையே!!

இன்சினீயரிங் கல்லூரிகளில் இடமின்றி ஏராளமானோர் தவிப்பதாகக் கேள்விப்படுகிறோம்! ஒவ்வொராண்டும் இந்த வேதனை பெருகுகிறதே தவிர குறையும் அறிகுறி தென்படவில்லை!!

இந்த இலட்சணத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இந்தியா வெங்கும் 14 புதிய இஞ்சினீயரிங் கல்லூரிகள் ஏற்படுத்தப் போவதாகச் சொன்னார்கள்,

இதில், இங்கு ஏதாவது இரண்டு மூன்று ஏற்படுத்தப்படுமென எதிர்பார்த்தோம்! 14ல் ஒன்று கூட தெற்குக்கு இல்லையாம்!

தெற்கில் ஏராளமான ஆலைகள் இல்லை. அப்படியிருக்கும் போது எதற்கு இங்கே இஞ்சினீயரிங் கல்லூரி?—என்று டில்லி கேட்கிறது.

காமராஜ் அரசுக்கு, வாதாடிப்பெற வழியில்லை! ஆதலால் வடக்கே மூன்றும், கிழக்கே ஆறும், மேற்கே ஐந்துமாக மொத்தம் 14 கல்லூரிகள் அமைக்கும் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது! தெற்குக்கு 'பட்டை நாமம்' குழைத்துப் போடப்பட்டிருக்கிறது!

இஞ்சினீயரிங் கல்லூரிகளில் இடம் கிடைக்காமல் திகைக்கும் மாணவமணிகளை எண்ணும்போது, ஏக்கமும் துக்கமும் மோதுகிறது. இந்தத் தவிப்பு, நீங்குவது என்றோ? நாமும் சரிநிகர் சமமாக வளர்வது என்றோ?

★

ஓட்டல் நடத்த!

வெளிநாட்டு நிபுணர் ஒருவர் அழைக்கப்பட இருக்கிறாராம்! எதற்குத் தெரியுமா? ஓட்டல் தொழிலை எப்படி நடத்துவதென்பது குறித்துச் சொல்லித் தர!

டில்லி சர்க்கார், அந்த நிபுணரை வரவழைக்கும் பொறுப்பையும், அவருடன் கலந்தாலோசிக்கும் சிரமத்தையும், இரயில்வே இலாகாவினர்வசம் ஒப்படைத்துள்ளனர். அந்த நிபுணர் வந்ததும், அவரைக்கொண்டு, ஓட்டல் தொழிற் பயிற்சிக் கழகம் ஒன்று ஆரம்பிக்கப்போகிறார்களாம் டில்லி சர்க்கார். அதில் எப்படி ஓட்டல் நடத்துவது, 'சர்வ்' செய்வது எவ்விதம் என்பது குறித்தெல்லாம் சொல்லிக்கொடுக்கப்படுமாம்.

அதுமட்டுமல்லவாம்! சில மாணவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி, இது சம்பந்தமான உயர்ந்த 'படிப்பு' களைக் கற்று வரவும், ஏற்பாடு செய்யப்படுமாம்.

காஞ்சீபுரம்

22—7—'56

தம்பி !

ஈவு இரக்கம் காட்ட மாட்டான்; எதிர்த்திடத் துணிந்தோரை மட்டுமல்ல, ஏனய்யா இந்த அக்ரமம் செய்கிறீர், உமக்கு நான் என்ன கேடய்யா செய்தேன் என்று கேட்டாலும் போதும், அவர்களையும் அடித்து நொறுக்குவான்; பெண்களின் அழுகுரல் கேட்டு மனம் பதறமாட்டான், பச்சிளங் குழந்தைகளின் மழலை கேட்டு இன்புறவும்மாட்டான், பயந்து அக்குழவிகள் அழுது துடித்திடும்போது மனம் இளக மாட்டான்; இரத்தம் ஆறென ஓடும், கண்டு கலக்கம் கொள்ளமாட்டான்; குடிசைகளைக் கொளுத்துவான்; நெருப்பில் வீழ்ந்தோர் அலறித் துடிப்பர், அவன் அது கண்டு இரக்கம் காட்டமாட்டான்; வெற்றி ஒன்றுதான் அவன் குறிக்கோள்; எதிர்ப்பட்டோர் அனைவரும் தனக்கு அடிபணிந்தாக வேண்டும், இல்லையேல் தன் வல்லமையை அவர்கள் காண வேண்டும், அழிந்தொழிய வேண்டும் என்றே எண்ணுவான்; கொடு நோய் எங்ஙனம் குமரியாயினும் குழவியாயினும் குடுகுடு கிழவராயினும், இரக்கம் காட்டாதோ, அதுபோலவே, எவர்பாலும் இரக்கம் கொள்ளாது அழிவை உமிழ்ந்த வண்ணம் இருப்பான்; காட்டுத் தீ போலப் பரவி, பயங்கர நாசத்தை விளைவிப்பான்.

செங்கிஸ்கான், தைமூர் போன்றவர்கள் குறித்து இவ்விதம் கூறப்பட்டிருக்கிறது.

அழிவினை அவர்கள் ஏவி ஏவி, உலகில் பல்வேறு இடங்களிலே அச்சத்தை மூட்டிவிட்டனர்; அந்த நகரம் நாசமாக்கப்பட்டது, இத்துணை ஆயிரம் மக்கள் வெட்டி வீழ்த்தப்பட்டார்கள்; பெண்கள் சிறைபிடிக்கப்பட்டார்கள், சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டனர், என்ற 'செய்தி' பரவிப் பரவி, தைமூர் வருகிறான், என்று எந்தக் கோடியிலிருந்தாவது வதந்தி கிளம்பினாலும் போதும், பீதி கொண்ட மக்கள் பேழை வேண்டாம் பிழைத்தால் போதும் என்று ஓடிப்போவர், தங்கள் இல்லங்களையும் உடைமைகளையும் விட்டு விட்டு! முதியவர்களை விட்டு விட்டு வாலிபர்கள் ஓடிப்போன சம்பவங்களும் உண்டு. எப்படியேனும் பிழைத்துக்கொள் என்று மனைவிக்குக் கூறி விட்டு தன் உயிரை மட்டும் காப்பாற்றிக் கொண்டால் போதும் என்று ஓடிவிட்ட 'கணவன்' கூட இருந்திருக்கிறான்!!

இவ்வளவும், அச்சத்தின் விளைவு.

அழிவின் மூலம் அச்சத்தை மூட்டிவிடுவது; அந்த அச்சம் பிடித்தாட்டும் நிலையை உண்டாக்கியதும், அந்த நிலையையே வெற்றிக்குக் கருவியாக்கிக் கொள்வது, என்பது அந்த வெறியர் கையாண்ட முறை.

ஐயோ! அவனை யார் எதிர்த்து நிற்க முடியும்?

அடே அப்பா! அவன் பழி பாவத்துக்கு அஞ்சாதவனாயிற்றே!

படுகொலைதானே அவனுக்குப் பஞ்சாமிர்தம்! சித்திரவதை செய்வதுதானே அவனுக்குப் பொழுதுபோக்கு!

வெறி நாய்கள் துரத்தும்போது நாம் என்ன செய்ய முடியும்!—

★ நாடகமாடிடலாம்....(1)

என்றெல்லாம் பீதி கொண்ட நிலையில் மக்கள் பேசுவர். இந்த 'பீதி'யே பிறகு, இந்தப் பேயர்களுக்கு மேலும் வெற்றிகளை, சிரமமின்றிக் கிடைத்திடச் செய்தது.

அந்த நகரம் வீழ்ந்துபட்டது! இந்த ஊர் அடிபணிந்தது; அங்கோர் அணிநகரம் அழிந்துபட்டது, அந்த எழிலூர் சுடுகாடாகி விட்டது — என்று சேதிகள் பரவின; அந்த நகர்களெல்லாம் அவ்விதம் அதோகதியான பிறகு, நமது நகர்மட்டும் அந்த நாசகாலனை எதிர்த்துநின்று தாக்குப் பிடிக்கவா முடியும்? தப்பிப்பிழைத்தோடிப் போவோம்! என்று விரண்டோடிப் போவர்; வெறியனின் படைகள் போரிடாமலே வெற்றி பெற்று, நகரங்களில் நுழைந்து, உடைமைகளைக் கொள்ளையிட்டுச் செல்லும்.

தைமூர், செங்கிஸ்கான் போன்றோரின் நாட்களிலே, 'பீதி' எப்படி மக்கள் மனதை அலைக்கழித்து, அவர்களை மேலும் கோழைகளாக்கிவிட்டதோ, அதே 'பீதி' ஜனநாயகமும் நாகரிகமும் மேலோங்கியுள்ள இந்த நாட்களிலே அடியோடு பட்டுப் போய்விட்டது என்று கூறுவதற்கில்லை.

பெர்லினில் கிளம்பிய பேய்க்குரல் கேட்டு, இங்கு பீதிகொண்டலைந்தவர்களைக் கண்டோமல்லவா!

ஹிட்லர், தன் வீரதீர பராக்கிரமத்தைக் கொண்டுதான், பெரும் பெரும் வெற்றிகள் கொண்டான் என்பதல்ல, அவனை எதிர்த்து நிற்கமுடியாது அவன் அசகாய சூரன்மட்டுமல்ல, 'அருள்' அவனுக்குத் துணை நிற்கிறது; அவன் படை பெருநெருப்புப் போன்றது, புகுந்த இடம் பொசுங்கிப் போகும் என்று பல்வேறு நாடுகளிலே 'பிரசாரம்' பலமாகப் பரவிற்று, வெற்றி அவனைத் தேடி வந்து, 'சரண்' அடைந்தது.

சூறுவளிப் படை — என்று பெயரே ஏற்பட்டுவிட்டது.

படையிலே உள்ளவர்கள் அனைவரும், உயிர் குடிப்பதிலே தேர்ச்சி பெற்றவர்கள், அவர்களின் போர் முறையே இதுநாள் வரையில் உலகு காணாதது என்றெல்லாம் பேசப்பட்டது. இதனால் கிளம்பிய பீதி ஐரோப்பாவிலும் பிற இடங்களிலும் பரவி, உலகையே ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது; கண்டோமல்லவா!

அதுபோலவே, ஆனால், பயங்கரத் தோற்றத்துடன் அல்ல, காங்கிரஸ் கட்சி அச்சமூட்டிவிட்டிருக்கிறது.

நல்லாட்சி நடத்துவதற்கான வாய்ப்பு அளிக்கப்படாமல், ஆங்கிலரிடம் சூத்திரக் கயிறு சிக்கிக் கிடந்த நிலையில் நீண்டகாலம் ஆட்சிப் பொறுப்பினை ஜஸ்டிஸ் கட்சி ஏற்று நடத்தி வந்தது; வெளியே இருந்துகொண்டு 'வீராவேசம்' காட்டியும், பழி பல சுமத்தியும், ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள்மீது மக்கள் வெறுப்பும் ஆத்திரமும் கொள்ளச்செய்யமுடிந்தது; இந்தச் சூழ்நிலையை உண்டாக்கிவைத்ததால், தேர்தலில் காங்கிரஸ் ஈடுபட்டதும், பெரும் தலைவர்களை வீழ்த்த முடிந்தது.

அப்போது, நாடெங்கும் கிளம்பிய பேச்சு, அரசியல் உலகிலே புதியதோர் சூழ்நிலையை உருவாக்கிற்று.

பித்தாபுரம் மகாராஜா தோற்றார்

வெங்கிடகிரி ராஜா தோற்றார்

பொப்பிலி ராஜா தோற்றார்

ஏலேலசிங்கப் பிரபு தோற்றார்

கோடீஸ்வரர் கோபாலபூபதி தோற்றார்

என்று இவ்விதமான சேதிகள் வெளிவந்தன.

சீமான்களும் சிற்றரசர்களும், இலட்சாதிகாரிகளும் மிட்டாமிராசுகளும், எப்படிப்பட்ட செல்வாக்கினை, பரம்பரை பாத்யதையாக, தலைமுறை தலைமுறையாகப்பெற்றவர்களாயினும், காங்கிரசிடம் எதிர்த்துநிற்கமுடியவில்லை, தோற்றோடுகிறார்கள். இலட்சக்கணக்கிலே பணத்தை வாரி வாரி இறைத்துப் பார்த்தனர், ஜரிகைக் குல்லாய்க்காரர் படையே கிளம்பி, மக்களிடம் 'ஓட்டு' கேட்டு மிரட்டியும் மயக்கியும் பார்த்தது; ஓட்டுக்குப் பணம் கொடுத்தும் பார்த்தனர்; எதுவும் பலிக்கவில்லை; மக்கள் புதியதோர் எழுச்சி பெற்றனர்; எத்தர்களின் தித்திப்புப் பேச்சுக் கேட்டு ஏமாளிகளாகமாட்டோம், எம்மை ஆள்வதற்கான அதிகாரத்தை இந்த ஆள்விழுங்கிகளுக்குத் தாமாட்டோம்; மிரட்டினால் பணிந்து விடமாட்டோம்; மயக்கினால் ஏமாந்து போகமாட்டோம்; காங்கிரசுக்குத்தான் எமது ஓட்டு! என்று கூறினர், காங்கிரசை எதிர்த்தோர் அனைவரும், படுதோல்வி அடைந்தனர்.

மண்ணைக் கவ்வினர்! படுதோல்வி அடைந்தனர்! முகத்தில் கரி பூசப்பட்டது! மூக்கு அறுக்கப்பட்டது! மூலையில் துரத்திவிட்டனர்! முக்காடிட்டுச் சென்று ஓடினர்! காங்கிரஸ் தேர்க் காலில்

(15-ம் பக்கம் பார்க்க)

வாழ்த்துகிறோம்

★

நமதியக்கத் தோழியர் அருண்மொழி, பி. ஓ. எல். அவர்களுக்கும் தோழர் ஏ. கே. வில்வம் அவர்களுக்கும் கடந்த 14—7—56 அன்று பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. மணமக்களை, மனமார வாழ்த்துகிறோம்.

★

திருவொற்றியூர் டி. சண்முகம் எம். எல். ஏ. அவர்களது திருச்செல்வி சரோஜினிக்கும் திரு. எம். ராஜாவுக்கும் மணமகள் இல்லத்தில் அண்ணாதுரை தலைமையில் 15—7—56 அன்று வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி டாக்டர் பி. வரதராசுலு, எம். எல். ஏ; வி. வி. இராமசாமி எம். எல். ஏ, அ. பொன்னம்பலனார், ப. ஜீவானந்தம் எம். எல். ஏ, கே. கே. நீலமேகம், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன் ஆகியோர் பேசினர். மாலையில் சாமி. சுப்புலட்சுமி நடன விருந்து நிகழ்ந்தது. மணமக்களுக்கு நம்முடைய வாழ்த்துகள்.

முகப்பு விளக்கம்...

புதிய நாடு கண்டவர்

டேவிட் பென்குரியன் இவரது பெயர். தன்னுடைய இனத்தவர்கள், உலகத்தின் ஒவ்வொரு கோடியிலும், அலைவதைக் கண்டு மனம் நொந்தார். மார்க்கம் என்ன என்று யோசித்தார். தமக்கென ஒரு நாடு இல்லாததுதான், காரணம் எனக் கண்டார். போரிட்டார். வென்றார். வேற்றிடங்களிலே வதியும், தன்னினத்தவர்களை, கப்பல்களில் ஏற்றிக் கொண்டு வந்து நிரப்பினார். இன்று அதோ, அவருடைய நாடு, சிறப்போடு விளங்குகிறது இஸ்ரேல் எனும் திருப்பெயர் பூண்டு.

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, இஸ்ரேல், எனும் பெயர் வேத நூல்களிலும், அகராதியிலும்தான் இருந்தது. இன்று ஒரு நாட்டின் பெயர் அது! அகிலஉலக நாடுகள் எல்லாம் அமர்ந்திருக்கும் ஐ. நா. சபையிலே அதுவும் ஒரு அங்கம்!

"நாடற்ற கூட்டமாமே நாம்? ஜெர்மனி வேட்டையாடுகிறது நம்மவர்களை; இங்கிலாந்து எகத்தாளம் செய்கிறது; பிரான்சில் பிரஜா உரிமை கிடையாது! இப்படி எங்கேயிருந்தாலும் நம்மவர்கள் படும் அவதி சொல்லுந்தரமல்ல. நாம் நாடற்றவர்களா? இன்றுள்ள ஜெர்மனியும், பிரான்சும், இங்கிலாந்தும், அமெரிக்காவும், நாடுகளாக உருப்பெறுவதற்கு முன்னரே —அவர்கள் போற்றும் இயேசுநாதர் பிறப்பதற்கு முன்னமேயே எழிலோடு வாழ்ந்த இனம் நாம். ஆனால் இன்று ஒண்ட இடமின்றித் தவிக்கிறோம். ஒரு பக்கம் அரபு நாடுகள் மிரட்டுகின்றன. அலைகடலுக்கு மத்தியிலே அகப்பட்ட சிறு தோணிபோல, இஸ்லாமிய நாடுகளுக்கிடையே பாலஸ்தீனம் கிடக்கிறது. அதுவும், நமது பொறுப்பில் அல்ல; இங்கிலாந்தின் அடிமை நாடாக! இந்நிலை மாறினால், நமது இராஜ்யம் இங்கே அமைந்தால், நமக்கென்று ஒரு நாடு ஏற்பட்டால், வெளி நாடுகளில் விரட்டப்படும் யூதர்களே உங்களின் துயரம் போகும்; தொல்லை குறையும்" என்று முழக்கமிட்டார் பென்குரியன்.

யூதர்கள், மிகப் பழம்பெரும் இனத்தவர்கள். அவர்களது திரு இடத்திலேதான், உலக மகா ஒளியாகிய இயேசு பிறந்தார். 2000 ஆண்டுகளுக்குமுன்பே, எகிப்தும் ரோமாபுரியும் ஏதன்சும் பாபிலோனியாவும் ஏற்றம் பெற்றிருந்த நாட்களிலேயே சிறப்போடு விளங்கியதாகும்; பாலஸ்தீனம். எனினும், பிறகு சிதைந்தது. யூத மக்கள், இடம் தேடி அலையலாயினர்! பாலஸ்தீனத்தில் மீந்தவர்களையும் முதலாம் உலகப் போருக்குப்பின் பிரிட்டன் அடிமைப்படுத்தியது!

பென்குரியன் எழுப்பிய முழக்கம், எல்லா நாடுகளிலும் வாழ்ந்த யூதர்களின் காதில் எதிரொலிக்கலாயிற்று. அதேசமயத்தில், ஆண்டவர்களான பிரிட்டிஷாரின் கருத்திலும் உரைக்கலாயிற்று.

"பென்குரியன் கூற்று தவறு. அதை, அனுமதிக்கமுடியாது. வெளியிடத்து யூதர்களை பாலஸ்தீனத்துக்குள் விடமாட்டோம்" என்று பிரிட்டிஷார் வெள்ளை அறிக்கை வெளியிட்டனர். யூதர்களின் பலமிக்க இராஜ்யம் மலருவதை பிரிட்டிஷார் மட்டுமல்ல, சுற்றியிருக்கும் எகிப்து, சிரியா, ஜோர்டான், ஈரான், இராக், சவுதி அரேபியா, துருக்கி முதலிய இஸ்லாமிய நாடுகளும் விரும்பவில்லை.

இந்த அரபு நாடுகளின் மனநிலையை அனுசரித்துப்போக விரும்பிய, பிரிட்டனும், பென்குரியன் முயற்சியை சீர்குலைக்க முயன்றது.

ஆனால், பென்குரியனோ, கள்ளக் கப்பல்கள் மூலம் வெளி நாடுகளில் வதிந்த யூதர்களைக் கொண்டு வந்து இறக்கலானார், பாலஸ்தீனத்துக்குள்! பதைபதைத்த, பிரிட்டன், தடைகளைப் போட்டது. தடைகளைத் தவிடு பொடியாக்கினர், இத்தலைவர் — தினசரி, ஏராளமான யூதர்கள் இறக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள், அங்கு.

இதைக் கண்ட அரபு நாடுகள், அச்சத்தாலோ அல்லது ஆத்திரத்தாலோ, யூதர்களைத் தாக்க ஆரம்பித்தனர்! யூதர்களும், பாலஸ்தீனத்துக்குள் வாழும் அராபியர்களை கண்ட இடத்தில் அடிக்கவும், தொல்லைப் படுத்தவும் செய்தனர். இதனால், உள் நாட்டு எல்லைகளில், தினசரி போர் நடைபெறலாயிற்று. அராபியர்களை யூதர்கள் வெளியேற்ற முயல்வதும், அந்த முயற்சியைச் சீர்குலைக்க அவர்கள் முயல்வதுமாகப் பெரும்போரே நடந்தது! இத்தனைக்கும் ஆட்சி புரிந்துகொண்டிருந்தது, பிரிட்டனுகும்—அதனால், இந்த எழுச்சியை அடக்க முடியாமற்போகவே, பாலஸ்தீனத்தைவிட்டு தான் வெளியேற விரும்புவதாகவும் அங்கு நடைபெறும் சண்டைக்கு ஒரு முடிவு காணுமாறும் ஐ. நா. சபைக்குத் தெரிவித்தது!

ஐ. நா. சபை செக்கோஸ்லோவேகியா, பொலிவியா, டென்மார்க்; பனமா, பிலிப்பைன்ஸ் நாடுகள் கொண்ட ஒரு கமிஷனை நியமித்தது.

அதன் காரணமாக பாலஸ்தீனம் பிரிக்கப்பட்டு, இஸ்ரேல் அமைந்தது— 1948-ல் பென்குரியன் கண்ட கனவு நிறைவேறிற்று — யூதர்கள் தமது இலட்சிய பூமியைப் பெற்றனர்.

டேவிட் பென்குரியனின் ஆசைப்படி வெளி நாடுகளிலிருந்து, இஸ்ரேலுக்குள் வந்தோர் தொகை எட்டு லட்சமாகும்! இவர்களைக் கொண்டு வந்து சேர்க்கவும், அராபியர்களுடன் சண்டைபோட ஆயுதங்களை அனுப்பவும், ஆங்காங்குமிருந்த யூதப் பிரபுக்கள் மிகுந்த உதவி செய்தனர்! ஒரு சமயம், பாஸ்தீனத்துக்கு ஆயுதத் தளவாடங்களை அனுப்ப முயற்சித்தமைக்காக அமெரிக்காவின் ஒரு யூதப் பிரபு, விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டார்." இதில் என்னய்யா தவறு? என் இனம், யூத இனம். அவர்களுக்காக, பாலஸ்தீனத்திலுள்ள ஹகானா (ஹகானா என்பது யூதர்களின் இரகசிய இயக்கத்தின் பெயர்) பாடுபடுகிறது. அதன் வேண்டுகோளின்படி, இவைகளை அனுப்பி வைக்கிறேன்" என்று பதிலிறுத்தாராம், அவர்.

ஏற்கனவே இருந்த எட்டு லட்சம் யூதர்களோடு புதிதாக வந்த எட்டு லட்சம் பேரும சேர்ந்து இஸ்ரேலின் இன்றைய மக்கள் தொகை 16 லட்சம் தான்! எனினும், இஸ்ரேல், உலக நாடுகளையேமிரட்டிக்கொண்டுள்ளது!

பென்குரியன் தலைமையில் இயங்கும் இஸ்ரேலில் மொத்தம் 16 இலட்சம் பேர்தான்—ஆனால், அது ஆரம்பத்திலேயே விரோதித்துக்கொண்ட இஸ்லாமிய நாடுகளில் சுமார் நான்கு கோடிக்குமேலிருக்கிறார்கள். இருந்தும், இஸ்ரேல் வாழ்கிறது.

எகிப்து, சிரியா இரண்டும் சேர்ந்து ஒரு அமுக்கு அமுக்கினால், இஸ்ரேல் இருந்த இடம் தெரியாமல் போய் விடும். ஏனெனில், இரண்டுக்கும் இடையிலிருப்பது இஸ்ரேல். இருந்தும், எகிப்தும் சிரியாவும், ஈராக்கும் ஈரானும், சவூதி அரேபியாவும், ஜோர்தானும், துருக்கியும், ஆப்கனிஸ்தானமும், பாகிஸ்தானும், இப்படி எல்லாப் பக்கங்களிலும் இஸ்லாமிய நாடுகளிருந்தும், அஞ்சாது வாழ்கிறது, இஸ்ரேல்.

அதற்குக் காரணம், பென்குரியன் யூத மக்களிடம் உண்டாக்கி வைத்திருக்கும் நாட்டுப் பற்றும், தியாக உணர்ச்சியும்தான்.

யூதர்களும், தமக்கொரு நாடுவேண்டும்; அது உலகத்தோடு வாழவேண்டும் என்பதில் அதிக ஆசை கொண்டிருக்கிறார்கள்,

அண்மையில், எகிப்தில், கோலாகலமாகக் கொலுவீற்றிருக்கும் நாசர் சொன்னார், 'நான் ஏன் இரஷ்யாவிடமிருந்து ஆயுதம் வாங்குகிறேன் தெரியுமா? இந்த இஸ்ரேலின்திமிரை அடக்கத்தான்!'' என்று. இவர் பஞ்சசீலம் பேசுபவர்!

அதற்கு பென்குரியன் பதில் சொன்னார், "நாசரே! உமது புன்சிரிப்பு எனக்கு ஆனந்தம் தருகிறது. உமது உருவம் கம்பீரமானது; அழகு பாராட்டக்கூடியது; ஆளும் திறன் கவனிக்கக்கூடியது. ஆனால், எம்மை பயமுறுத்த நினைக்கிறீரே, அது மட்டந் தட்டப்படவேண்டியது" என்று.

மத்யகிழக்கிலுள்ள எந்த அரபு நாடும், பென்குரியனை விரோதியாகத்தான் பாவிக்கின்றது. ஆயினும், அவர், அஞ்சாமற்தானிருக்கிறார்,

இந்நிலையில், கடந்த வாரம், இஸ்ரேலுக்கு வடக்கேயுள்ள சிரியா, எகிப்தோடு இணையப்போவதாக செய்தி வந்துள்ளது. எகிப்து, இஸ்ரேலுக்கு தென்மேற்கே இருப்பதாகும். இரண்டும் இணைந்தால், யூதர்களின் நிலை, இரு பூனைகளுக்கிடையில் அகப்பட்ட எலியைத்தான் ஒக்கும்! எனினும், பென்குரியன் கவலையற்று இருக்கிறார்!!

அவர் ஒரு கவி, கற்பனைகளைக் காரியமாக்கிடும் திறன் அவருக்குண்டு.

நான் அவரை, என் குருநாதராகக் கருதுகிறேன்.

என்னமோய்யா, அவர், ஏதாவது தவறு கள் செய்தாலும், எனக்கு அவரைத்தான் பிடிக்கிறது!

—என்று யூத மக்களால் மட்டுமல்ல அமைச்சர்களாலும்கூடப் பாராட்டும் தகுதியைப் பெற்று விளங்குகிறார், பென்குரியன். காரணம், ஜார்காலத்திய போலந்திலிருந்து தப்பி வந்து, தானே உழைத்து தன் குடும்பத்தைப் பாதுகாத்ததோடு, யூதர்களுக்கென ஒரு தாயகம் நிறுவ நினைத்து, வெற்றி பெற்றதுதான். அவரை, ஒருமுறை பர்மியப் பிரதமராகயிருந்த யூ-நூ சந்தித்தபோது, பென்குரியன் சொன்னாராம், "எனக்குப் புத்தரின் கொள்கைகள் மிக மிகப் பிடிக்கின்றன. ஓய்வு நேரத்தில் அது சம்பந்தமான நூல்களைத்தான் நான் படிக்கிறேன்'' என்பதாக.

எவ்வளவுதான் ஆபத்து வந்தாலும், பென்குரியன் விரல் காட்டிய திக்கிலே நாங்கள் போய் நிற்போம் என்று 16 லட்சம் யூதரும் முரசொலிக்கக் காரணம், அவர் புதுநாடு காணப் போராடியவர் என்பதுதான்! இழந்த நாட்டை மீண்டும் பெற்றுத் தந்தவர் எனும் புகழ்தான்.

இஸ்ரேலைவிட, எவ்வளவோ பெரிது,—திராவிடம்—பரப்பில் மட்டுமல்ல, பழம் பெருமையில்கூட.

அதற்காகத்தான், திராவிட நாடு வேண்டும், அது நமது நாடாக விளங்க வேண்டும் என்று கூறி வருகிறோம்.

நமது இலட்சியத்தை எளிதில் கேலி செய்திடலாம், அது எளிது. ஆனால், உலகப் படத்தில், உருவாகியுள்ள புதிய பூமிகளை இல்லையென்று கூறிவிட முடியாது.

எட்டாண்டுகளுக்கு முன் இஸ்ரேல், யாருக்கும் தெரியாது! இன்று அது ஒரு நாடு!!

★

'இலங்கை'யின் குரல்!

சிங்களத்தை போதனாமொழியாக ஏற்றுக்கொள்ளாத பள்ளிக்கூடங்களுக்கு அரசாங்கம் அளித்து வரும் மானியம் நிறுத்தப்படலாம் என நம்பகமான வட்டாரங்களிலிருந்து நமக்குக் கிடைத்துள்ள ஒரு செய்தி கூறுகிறது.

*

புதிய அரசாங்கத்தால் புதிதாக நிறுவப்பட்ட கலாச்சார மந்திரி இலாகா நாட்டிலுள்ள வெவ்வேறு பகுதி மக்களின் கலையும் கலாச்சாரத்தையும் வளர்ப்பதற்குப் பதிலாக படிப்படியாக ஒடுக்கவே திட்டமிடவிருக்கிறதென்றும் சிங்கள, பௌத்த கலைகளை வளர்ப்பது என்று கூறிக்கொண்டு படு பிற்போக்கான கலைகளை வளர்க்கவே முயற்சிகள் எடுக்கப்படும் என்று இந்த இலாகாவுடன் தொடர்புள்ள வட்டாரங்களில் கருதப்படுகிறது.

*

ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தன் கோரஆட்சியை யாழ்ப்பாணத்தில் நடத்தி வரும் தீண்டாமை அரக்கன் கடந்த திங்கட்கிழமை அதிகாலை 5-மணிக்கு அந்த அடிமைப் பிடிகளில் ஒன்றைச் சிறிது தளரவிட்டுள்ளான். அத்தளர்ச்சியின் காரணமாக வைதீக மனப்பான்மையும் மதத்தின் பேரால் வளர்ந்துள்ள மூட நம்பிக்கையும் வழிவிலகிக் கொடுக்கவே ஆண்டவன் சந்நிதியில் அனைவருடனும் சரிசமமாகச் சென்று வழிபடும் வாய்ப்பை 'ஹரிஜன' ஹிந்துக்கள் பெற்றுக்கொண்டார்கள். இலங்கையிலேயே பிரபலம் பெற்ற இந்து ஆலயம் எனப் போற்றப்படும் நல்லூர் கந்தசாமி கோயிலும், வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலும், வரதராஜ வெங்கடேஸ்வரப் பெருமாள் கோயிலும் தம் கதவுகளை அகலத் திறந்து வருக வருக என அவர்களை மக்கள் மணியோசை முழங்கி மகிழ்ச்சிப் பெருக்கோடு வரவேற்றன. வைதீகக் கோட்டைக்கு யாழ்பாண நகரிலே முதல் தடவையாக விழுந்த இந்த அடி ஆங்காங்கு எதிர்பாராத அதிர்ச்சியைக் கொடுத்ததெனினும் இன்றைய சூழ்நிலை அதனையெல்லாம் சகிப்புதன்மையோடு மனதில் அடக்கச் செய்துவிட்டது. இதனால் அந்த ஆலயங்களின் கதவுகள் மட்டுமல்ல பிறப்பிலே உயர்வு தாழ்வு காணும் பேதமை நெஞ்சங்களின் அறியாமைத் திரைகள்கூட அப்பால் அகலத் தொடங்கிவிட்டன. யாழ்பாணத்துத் தமிழ் மக்கள் வாழ்வில் என்றுமில்லாத ஒரு மலர்ச்சியையும் புத்துணர்ச்சியையும் ஊட்டிய அந்த நந்நாளை இலங்கைவாழ் தமிழினம் என்றுமே மறந்துவிட முடியாது,

"சுதந்திரன்"

திராவிடத்தில் அணுசக்தி

[புவியரசு]

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை ஒரு நாட்டின் மதிப்பை அந்த நாட்டில் நிறைந்துள்ள நீர், நில, செல்வ வளங்களைக்கொண்டு மட்டுமே கணக்கிடப்பட்டு வந்தது. ஆனால் இன்று எந்த ஒரு நாட்டின் மதிப்பையும் அந்த நாட்டில் கிட்டும் கனிப் பொருள்களைக் கொண்டே கணக்கிடப்படவேண்டிய அளவுக்கு உலகம் மாறிவிட்டிருக்கின்றது எனலாம். விஞ்ஞான கண்டுபிடிப்புகள் அதிகமாக வளர வளர கனிப்பொருள்களுக்கும் அக்கனிச் செல்வங்களைப் பெற்றிருக்கும் நாட்டிற்கும் சிறப்பும், அதேபோது தொழில் வளமும், அவ்வளத்தால் செல்வப் பெருக்கும் ஏற்படுவதைக் காணலாம். ஆகவே ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அந்த நாட்டில் கிட்டும் கனிப்பொருள்களே ஜீவனூடி என்றால் மிகையாகாது 19-ம் நூற்றாண்டில் உலகின் மற்றைய பாகங்களைவிட அதிகமான அளவில் பல கோடி டன்கள் நிலக்கரியையும், இரும்பையும் பெற்றிருந்த ஒரே காரணத்தால்தான் பிரிட்டன் ஓர் மாபெரும் தொழிற் புரட்சியை செய்து காண்பித்து உலகப் பிரசித்திபெற முடிந்தது.

அதே போன்று திராவிடம் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் ஓர் மாபெரும் தொழிற் புரட்சியை செய்து காண்பிக்க உள்ள வாய்ப்புகளோ ஏராளம். உலகின்வேறெந்த பகுதியும் பெற்றிராத அளவு 65 வகைக் கனிச்செல்வங்களை திராவிடநாடு பெற்றிருப்பதன் மூலம் உலகச் சிறப்பெய்துகிறது.

பிரிட்டன் தொழிற் புரட்சியை செய்வதற்கு இரும்பை, தொழில் துறைக்குப் பயன்படுத்தத் தேவைப்பட்ட சக்தியை, நிலக்கரியினின்றும் பெற முடிந்தது. ஆனால் திராவிடம்நிலக்கரிக்குவடக்கை அல்லவா எதிர்நோக்க வேண்டும் என்று ஐயவினவெழுப்பப்படுகின்றது. இக்கூற்றுமுற்றிலும் பொருந்தாததொன்றாகும். இந்நாட்டில் சுற்றேறக்குறைய 400-கோடி டன்கள் நிலக்கரி கிடைக்க வழியுள்ளது. இதில் நெய்வேலிமட்டுமே 200 கோடி டன்கள் நிலக்கரியைத் தர இருக்கின்றது. நிலக்கரியைப் பயன்கொண்டு தெர்மல் விசையை உற்பத்தி செய்ய வழியுள்ளதோடு நம் நாட்டு ஆற்று நீரோட்டத்தைப் பயன்படுத்தி நீர் மின்விசையை உற்பத்தி செய்தும், நம் நாட்டு கனிப் பொருள்களைக் கொண்டு தொழிற் புரட்சி செய்ய இயலும்.

இவை எல்லாவற்றையும்விட இன்றைய உலக அரசியலையும், பொருளியலையுமே மாற்றி அமைக்கும் அளவுக்கு சக்தி கொண்ட, ஆக்கத்திற்கும் அழிவுக்கும் பயன்படுத்தப்படும் அணுசக்தி (Atomic Energy)யை திராவிடத்தில் உற்பத்தி செய்து அணுசக்தியைத் தொழில் துறைக்கு பயன்படுத்துவதன் மூலம், உலகின் மற்றைய பாகங்களைவிட அதிகமான அளவில் கனிப் பொருள்களைப் பெற்றுள்ள நம் நாட்டை தென்கிழக்காசியாவின் தொழிற் சீமையாக, செல்வபுரியாக்க முடியும்.

அணுசக்தியை திராவிடத்தில் உற்பத்தி செய்யத் தேவைப்படும் எல்லா வசதிகளும் நிறைந்துள்ளன. அணுசக்தியை உற்பத்தி பண்ணத் தேவைப்படும் கனிப் பொருள்கள் மூன்று. அவை 1. யுரேனியம், 2. தோரியம், 3. மோனசைட், இம் மூன்று முக்கிய கனிகளும் நம் நாட்டில் வெறும் கடல் மணலோடும், களி மண்ணோடும் கலந்து பல கோடிக் கணக்கான டன்கள் புதைந்து கிடக்கின்றன. அதோடு அணுசக்தி உற்பத்திக்கு தேவைப்படும் துணை உலோகங்களாம் பெரிலியம் (பெரில்) சிர்கோனியம் (சிர்கோன்) கிராபைட் போன்றவைகள் உலகின் மொத்த தேவையையேகூட பூர்த்திசெய்யுமளவுக்கு இந்நாட்டில் கிடைக்கின்றன. நம் நாட்டைத் தவிர அக்கனிப் பொருள்கள் உலகின் சில பகுதிகளில் சிறு அளவே கிடைக்கிறது. ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, ஐக்கிய அமெரிக்கா, நார்வே, பிரேசில். இங்கை. கானடா போன்ற நாடுகளில் மட்டுமே இக்கனிப் பொருள்கள் மிகக் குறைந்த அளவில் கிடைக்கின்றன.

இன்னும் அரை நூற்றாண்டு காலத்திற்குள் உலக நாடுகள் அணுசக்திக்குத் தேவைப்படும் கனிப் பொருள்களுக்காக நிச்சயம் திராவிடத்தை எதிர்பார்த்தே ஆகவேண்டும் என்றால் மிகையாகாது.

நம் நாட்டில் யுரேனியம், திரு கொச்சி கடற்கரை பணற்பகுதி சென்னை கடற்கரை, நெல்லூர் மாவட்டம், ஆந்திரம் கடலோரப் பகுதி ஆகிய இடங்களிலும், தோரியம்; 13 இடங்களிலும், மோனசைட் தஞ்சை, மலபார், திருநெல்வேலி கடற்கரை, விசாகப்பட்டணம் ஆகிய இடங்களிலும், சிர்கோனியம்; கோவை, நெல்லூர், ராமனாதபுரம், நெல்லை, திருச்சி ஆகிய இடங்களிலும், கிராபைட்; கிருஷ்ணா, கடப்பை, நெல்லை, விசாகை ஆகிய இடங்களிலும் கோடிக் கணக்கான டன்கள் கிடைக்க வாய்ப்புள்ளது.

தவிர திராவிடத்தில் கிட்டும் கனிப்பொருள் மற்ற நாடுகளில் கிட்டுவதைக் காட்டிலும் மிகச் சிறந்த ரகத்தைச் சார்ந்தாகும் என்பது பூர்வ ஆராய்ச்சி வல்லுனர்களின் ஒரு மனதான முடி



வாகும். நம் நாட்டில் கிட்டும் 65 வகை முதல் ரக கனிப்பொருள்களில் சில குறிப்பிடத்தக்கவை மட்டும் எந்த அளவு அணுசக்தியை, அணுநிறையைப் பெற்றிருக்கின்றன என்பதை பட்டியல் விளக்கும்.

கனிப்பொருள்	அணு எண்.	அணுசக்தி நிறை
1. யுரேனியம்	92	238.07
2. தோரியம்	90	232.12
3. ஈயம்	82	207.21
4. தங்கம்	79	197.2
5. டங்ஸ்டன்	74	183.92
6. டன்டாம்	73	180.88
7. பாரியம் (பாரைட்ஸ்)	56	137.36
8. ஆன்டிமோனி	51	121.76
9. டின் (தகரம்)	50	118.70
10. வெள்ளி	47	107.880
11, மோலிப்டினம்	42	95.95
12. கொலம்பியம்	41	92.91
13. சிர்கோனியம்	40	91.22
14, ஸ்ரோன்டியம்	38	87,63
15. துத்தம்	30	65.38
16. செம்பு	29	63.54
17. நிக்கல்	28	58.69
18. இரும்பு	26	55.85
19. மேங்கனீஸ்	25	54 93
20. குரோமியம்	24	52.01

உலக நாடுகளெங்கினும் கிட்டாத அணுசக்தி உற்பத்திக்கேற்ற மிகச் சிறந்த வகையைச் சார்ந்த யுரேனியமும், தோரியமும், மோனசைட்டும் திராவிடத்தில் மட்டும்தான் கிடைக்க வழியுள்ளது. அணுசக்தி ஆராய்ச்சி வல்லுணர்களால் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிகச் சக்தி வாய்ந்த அணு U 235ஐ உற்பத்தி செய்யக்கூடிய யுரேனியம் நம் நாட்டைத் தவிர வேறெங்கும் தேவையான அளவு கிட்டுவதில்லை. ஆகவே எதிர்காலத்தில் திராவிட நாடு உலக வல்லரசுகளின் முன் தலை நிமிர்ந்து நிற்கும் தனிச் சிறப்பைப் பெறப்போகின்றது என்பதில் கொஞ்சமும் ஐயப்பாட்டிற்கிடமில்லை. U 253 என்ற யுரேனிய அணு (Isotope) தான் பல்லாயிரக் கணக்கான வாட்கள் மின் சக்தியை உண்டுபண்ண தகுதிவாய்ந்ததாகும். மின் சக்தி உற்பத்தியை தொழில் துறைக்கு பயன்படுத்த இன்றியமையாத தேவையாகக் கொண்டிருக்கும் நம் நாட்டிற்கு இவ்வணு ஓர் சிறந்த புதையல் ஆகும். உலகின் தொழில் முன்னேற்றத்திற்கு இந்த U 235 ஓர் ஊன்றுகோல் என்று கூறப்படுவதிலிருந்து இன்னும் அரை நூற்றாண்டு காலத்திற்குள்ளாகவே திராவிட நாடு உலகம் வியக்கும் மாபெரும் அணுசக்தித் தொழிற் புரட்சியை செய்து காண்பித்து அழிவுக்குப் பயன் படும் அணுசக்தியை ஆக்கத்திற்கு பயனபடுத்தி உலக வல்லரசுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாய் அமைந்து சிறப்பெய்த வாய்ப்புகளும், வசதிகளும் உண்டு.

அடுத்து உலக நாடுகள் அணுசக்தியை எங்கெந்த வகையில் எல்லாம் பயன்படுத்த முற்பட்டுள்ளன என்பதை ஆராய்வோம். இன்று அணுசக்தி உற்பத்தியில் பல துறைகளிலும் முன்னேறியுள்ள நாடுகள் பல. அவற்றிலே குறிப்பிடத் தக்கவை அமெரிக்கா, இரஷ்யா, பிரிட்டன், கானடா ஆகும்.

அமெரிக்காவில் அணுசக்திக் கனிப் பொருள்கள் நியுயார்க், கன்னெக்டிகட், வெர்ஜினியா, வட கொரோலினு, இடாகோ போன்ற பகுதிகளில் பாறைகளில் கலந்தும், கற்களுள் பதிந்தும் கிடைக்கின்றன. அங்கு கிட்டும் கனிப்பொருள்கள் அந்நாட்டின் தேவைக்குப் போதுமானதாய் இராததால் உலக மார்கெட்டில் அதிக விலை கொடுத்தேனும் அக்கனிப்பொருள்களை வாங்க வேண்டியுள்ளது. ஆகவே இக்கனிப் பொருள்களுக்காக அமெரிக்கா ஆப்பிரிக்காவை எதிர்நோக்க வேண்டியுள்ளது. மேலும் அந்நாட்டில் கிட்டும் யுரேனியமும், தோரியமும், மோனசைட்டும் தரம் குறைந்தவை என்பதோடு பாறைகளினின்றும் பிரித்தெடுப்பதில் சிரமமும் செலவும் அதிகம். ஆனால் நம் நாட்டில், திராவிடத்தில் இக்கனிப் பொருள்கள் மணலோடும், கரிசல் களிமண்ணிலும் கிடைக்கின்றது என்பதை கருத்திற் கொள்ளல்வேண்டும். எனினும் விஞ்ஞானத் துறையில் மிகவும் முன்னேறியுள்ள அமெரிக்கா தன்னகத்தே கிடைக்கும் கனிப் பொருள்களைக்கொண்டு மிகப் பெரும் சாதனைகளைச் செய்துள்ளது எனலாம்.

முதன்முதலில் 1953-ம் ஆண்டு அமெரிக்க அணுசக்தி கமிஷன் யுரேனியம் 238ஐ எரிபொருளாகப் பயன்படுத்தி யுரேனிய அணுவைப் பிளந்து யுரேனியம் 235 என்ற மிக சக்திவாய்ந்த அணுசக்தியை உண்டுபண்ணும் வழியைக் கண்டுபிடித்து உலக அணுசக்தி உற்பத்தித் துறையையே மாற்றியமைத்து புதிய நிலை பெறச் செய்தது எனலாம். சாதாரண யுரேனியம் 238 விட இப்புதிய யுரேனியம் 235 என்ற சக்தி 140 மடங்கு தீவிர அணுசக்தியைக் கொண்டதாகும். இந்த சக்தியை மிகச் சிறு அளவே பயன்படுத்தி ஒரே நேரத்தில் சுமார் 60,000 கிலோ வாட்கள் உற்பத்தி செய்யும் அணுசக்தி மின் விசை நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்திருப்பதால் அமெரிக்கா எதிர்காலத்தில் மிகப் பெரிய தொழிலுலகமாக மாற உள்ளது எனலாம்.

அணுசக்தியைப் பல துறைகளுக்கும் பயன்படுத்துவதற்கு என்று வழிவகைகளை ஆராய 1953–54-ஆம் ஆண்டில் மட்டும் 12,60,00,000 டாலர்களை செலவிட்டுள்ளது. 1954ல் 'வெஸ்டிங் ஹவுஸ்' கார்பொரேஷன் என்ற ஸ்தாபனம் ஒன்று சர்க்கார் விஞ்ஞானத்துறையாளர் உதவியோடு கனநீர் அணு உலை ஒன்றை பிட்ஸ்பர்க் அருகில் உள்ள ஷிப்பிங் ரோர்ட்டில் அமைத்துள்ளது. இவ்வணு உலையில் யுரேனியம் 235ஐபயன்படுத்தி அணுசக்தியை உற்பத்தி செய்ய ஏற்பாடாகியுள்ளது. அதேபோது அவ்வணு உலையை குளிரச் செய்ய சாதாரண தண்ணீரையே உபயோகிக்க வழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது பெரும் சாதனையேயாகும். இது 50,00000 டாலரில் ஏற்பாடு செய்யப்பட்டதாகும். இவ்வுலை 1957க்குள் 2,00,000 கிலோ வாட்கள் உஷ்ணத்தையும், 60,000 கிலோ வாட்கள் மின்சக்தியையும் உற்பத்தி செய்யும் சிறந்த அணுசக்தி நிலையமாகத் திகழும்.

அடுத்து, இடாகோவில் பிரீடர் அணு உலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதுபோலவே 62,000 கிலோ வாட்கள் உஷ்ணத்தையும், 15,000 கி. வாட்கள் மின்சக்தியையும் உற்பத்தி செய்வதோடு, யுரேனியம் 228யும் புளூடோனிய அணு எரிபொருளையும் தயாரிக்கும் மற்றொரு ஆராய்ச்சி அணு உலையும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் 20.000 இ. வாட்கள் உஷ்ணத்தையும், 5000 இ. வாட்கள் மின்சக்தியும் உற்பத்தி செய்யும் கொதிநீர் அணுவலை ஒன்றும் அமைத்துள்ளனர். இவ்வுலை சாதாரண யுரேனியத்தையும் யுரேனியம் 235யும் பயன்படுத்தி அணுசக்தியை உற்பத்தி செய்யும்.

தவிர, கலிபோர்னியாவில் நார்த் அமெரிக்கன் அவியேஷன் இன்கார்பொரேஷன் என்ற தனியார் துறை 2,500,000 டாலர் செலவில் 20,000 இ. வாட்கள் உஷ்ணத்தை உற்பத்தி செய்யும் சோடியம் அணு உருலை ஒன்றை அமைத்துள்ளது. இந்த அணு உலை யுரேனியம் 233யும் தோரியத்தையும், இராபைட்டையும் எரிபொருளாக உபயோகித்து, அணு உலையை குளிர்ச்சி செய்ய சோடியத் திடப்பொருளைப் பயன்படுத்த முற்பட்டுள்ளது,

இவை எல்லாவற்றையும்விட அணுசக்தியை சப்மெரீன்களை இயக்க உபயோகித்து வெற்றி காணப்பட்டுள்ளது; அட்லாண்டிங் கடலை கடக்க இந்த சப்மெரீன் சாதாரணமாக 3000 டன்கள் நிலக்கரியை உபயோகிக்க வேண்டும். ஆனால் அணுசக்தியைப் பயன்படுத்த முற்பட்டால் ஒரே ஒரு பவுண்டு யுரேனியம் போதுமானதாகும். இந்த உலகம் சாதனையை நிரூபிக்க 1954-ம் ஆண்டு 21-ம் நாள் உலகிலேயே முதன் முதலாக குரோட்டனில் அணுசக்தியால் ஓட்டப்பெறும் சப்மெரீன் 'நாட்டில்'சை திருமதி ஐசன்ஹோவர் வெள்ளோட்டம் விட்டார்கள், அடுத்து கடல் ஓநாய் என்ற மற்றொரு சப்மெரீனும் கட்டப்பட்டு வருகின்றது.

பிரிட்டன் தன்னகத்தே தேவையான அளவு யுரேனியம், தோரியம், மோனசைட் போன்ற அணுசக்திக் கனிப் பொருள்கள் இல்லாமையால் தென் ஆப்பிரிக்கா, வடரொடீசியா, தென்மேற்கு ஆப்பிரிக்கா போன்ற ஆப்பிரிக்க நாடுகளிடமிருந்து பெறவேண்டி உள்ளது. அமெரிக்காவைப்போன்றே பிரிட்டனும் பல துறைகளுக்கும் அணுசக்தியைப் பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளது, மின் சக்தி உற்பத்திக்கு பிரிட்டன் இதுவரை தன்னிடமுள்ள நிலக்கரியை பயன்படுத்தி தொழில் துறைக்கு வினியோகித்து வந்தது. ஆனால் அணுசக்தியைக் கொண்டு மின்விசையை உற்பத்தி செய்வதன் மூலம் இரண்டு வகையில் இலாபம் பெற முடிகிறது. நிலக்கரியைவிட அணுசக்தி அதிகமான மின்விசையைத் துரிதமான காலத்தில் உற்பத்தி செய்வதால் புதிய தொழில்கள் மலரவும், அதிக மின் சக்தியை தட்டின்றி தொழிலகங்களுக்கு சப்ளை செய்வதன் மூலம் அதிக வருவாயும் பெற முடிகிறது. மற்றும் பிரிட்டன் ரேடியோ கதிரியக்க அணுக்களை அணு உலைகளுக்கு பயன்படுத்த வேற்று நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வாணிபம் நடாத்தும் அளவுக்கு வளர்ந்துள்ளது. 1951–52 ஆண்டுகளில் இவ்வாணிபத்தால் குறிப்பிடத்தக்க டாலர் வருவாய் பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரிட்டனின் பல பகுதிகளிலும் 9-இடங்களில் அணு உலைகள் அமைத்து அணுசக்தியை எந்தெந்த வகைகளில் பயன்படுத்த முடியும் என்று ஆராயவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவற்றிலே முக்கியமானவை 6.

உலக நாடுகள் ஒவ்வொன்றும் போட்டி போட்டுக்கொண்டு அணுசக்தியை பயன் படுத்திக் கொள்ள வழிவகைகளைக்காண முனைந்துள்ளன. இரஷ்யா 50,000-லிருந்து 100,000 வரட்கள் வரை மின்சக்தியை உற்பத்தி செய்யும் மாபெரும் அணுஉலைகள் அமைத்துள்ளது. கானடா சிறந்த வகையில் அணுஉலைகள் அமைத்துள்ளதோடு கொழும்புத் திட்டத்தின் கீழ் பல ஆசிய (இந்தியா) நாடுகளுக்கும் அணு உலைகள் அமைக்க உதவி வருகிறது.

யூகோஸ்லாவியா இரஷ்யாவின் உதவியோடு 6500 முதல் 10,000 கி. வாட்கள் சக்தியை உண்டு பண்ணும் அணு உலை அமைத்துள்ளது. அவ்வாறே போலந்தும் இரஷ்யாவின் உதவியோடும் வார்சாவில் ஓர் அணு உலை நிர்மாணித்திருக்கிறது. பெல்ஜியம் மோல் என்னும் இடத்திலும், பிரான்சு "P2;" "JEO" என்ற இரட்டை அணு உலைகளையும், நார்வே 'JEEP" என்ற அணு உலையையும், நெதர்லாந்து நிஜ்மேகென் என்ற இடத்தில் மின்சக்தி உற்பத்தி அணு உலையையும், இத்தாலி மிலானுக்கருகிலும், ஸ்வீடன் ஸ்டாக்ஹோமிலும், மேற்கு ஜெர்மனி மற்றோர் இடத்திலுமாக ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் அணுசக்தியை உற்பத்தி செய்கின்றன. இவைகளோடு போட்டியிடுமளவுக்கு ஜப்பான் மாபெரும் அணு உலை அமைக்க திட்டமிட்டுள்ளதாக சமீபத்திய செய்திகள் கூறுகின்றன.

அணுசக்தி ஒன்றே தொழில் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது என்ற உண்மையுணர்ந்த உலக நாடுகள் ஒவ்வொன்றும் முழு மூச்சோடு அத்துறையில் இறங்கியுள்ளன. ஆனால் இவற்றில் எந்த ஒரு நாட்டிடமாவது அணுசக்திக் கனிப் பொருள்கள் தேவையான அளவு உள்ளதா என்றால், நிச்சயம் இல்லை எனலாம்.

அணு உலை அமைத்துள்ள நாடுகள் யாவும் தன் நாட்டில் எங்காவது ஒரு பகுதியில் யுரேனியம் கிட்டாதா? தோரியம் புதைந்து கிடக்காதா? மோனசைட் அகப்படாதா? என்று தேடி அலைகின்றன. ஆஸ்திரேலியா 100 மைல் பரப்பளவில் யுரேனியம் எங்கிருந்தாலும் கண்டு பிடிக்கும் கருவிகளை விமானத்தில் சுமந்துகொண்டு அந்த நாட்டை சுற்றிச் சுற்றி வட்டமிட்டு வருகின்றது. யுரேனியக் கனிகளைக் கண்டுபிடிக்க அந்த நாடுகள் இத்தனை கஷ்டப்பட வேண்டியுள்ளது.

ஆனால் அதே போது கோடிக் கணக்கான டன்கள் யுரேனியத்தையும், தோரியத்தையும், மோனசைட்டையும் பெற்றிருக்கும் திராவிடத்தின் நிலை என்ன? வேற்று நாடுகளிலிருந்து கனிப் பொருள்களை இறக்குமதி செய்யும் நாடுகள் தொழில் வளம் கண்டு நாட்டின் நிலையையே மாற்றியமைக்கும் மாட்சியைக் காணும் உலகம், கனிச்

செல்வ வளம் மிக்க திராவிடம் சோம்பிக் கிடக்கும் தேம்பியழும் காட்சியைக் காண்பதேன்? தஞ்சை, நாகை, நெல்லை, சென்னை, கொச்சி, ஆலப்புழை, திருவனந்தபுரம், நெல்லூர், பிமிலிப்பட்டணம், விசாகை போன்ற இடங்களில் சுமார் 13 வகையான அணு உலைகள் அமைக்கும் வாய்ப்பிருந்தும், பிரிட்டனைவிட, அமெரிக்காவை விட வசதியிருந்தும் திராவிடத்தில் தொழிலற்று வேலையற்றோர் பட்டியல் நாளுக்கு நாள் விரிவது ஏன்? ஏன் இந்த இழி நிலை? இந்நிலை மாறவேண்டாமா?

கோடிக்கணக்கான கனிச்செல்வக் குவியல்களைப் பெற்றிருக்கும் திராவிடம் ஆலப்புழையில் குடிசைத் தொழில்போல் 1500 டன்கள் மட்டுமே ஆண்டுக்கு யுரேனியத்தையும் தோரியத்தையும் உற்பத்தி செய்யக் காரணம் என்ன? அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் 1500 டன் அணுசக்தி கனிப்பொருள்கள்கூட திராவிடத்திற்குப் பயன்படாமல் வடநாட்டு வணிகக் கோட்டமாம் பம்பாய்க்கருகில் உள்ள டிராம்பேயில் அணு உலை அமைக்கப்பட பயன்படுத்தப்படுவதேன்?

இந்த வினுக்களுக்கெல்லாம் உள்ள ஒரே பதில் திராவிடம் தனி அரசாய் மலரவேண்டும். திராவிட நாடு தன்னுட்சி பெறவேண்டும். அதன் பின்புதான் திரு கொச்சி ஒரு 'டெர்பிஷயராக' தஞ்சை ஒரு 'ஸ்டாபோர்டுஷய'ராக, நெல்லூர் ஒரு 'இடாகோ'வாக, விசாகை ஒரு 'பிட்ஸ்பர்க்'காக மாறமுடியும். வடநாட்டு வஞ்சக ஆதிக்கக்காரர்களின் காலடியில் திராவிடம் அடிமைப்பட்டு கிடக்கும்வரை நாம் 'டிராம்பே'க்களைத்தான் காண வேண்டியிருக்குமே தவிர நிச்சயம் நியாயத்தை நேர்மையை எதிர்பார்க்கமுடியாது

திராவிடநாடு தனியரசாய் அமைந்து கால்நூற்றுண்டுக்குள்ளாகவே உலகம் வியக்கும் மாபெரும் அணுசக்தி தொழிற் புரட்சியை செய்து காண்பிக்க இருக்கும் வாய்ப்புகளை யாரே மறுப்பர்?

★

ஊர்வலம்

[ஞானக்கண் பேட்டி]

இராசபாளையத்தில் 10 காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டிருக்கிருர்கள் என்கிற சேதியைக் கண்டதும் அவர்களைப் போய்ப் பார்த்து வரலாமென்று கிளம்பினேன். போய் பார்த்ததில் அவர்கள் மீது போலீசார் வழக்கும் பதிவு செய்திருப்பதாகத் தெரிந்தது. "ஏனிப்படிப்போய் மாட்டிக்கொண்டீர்கள்?" என்று அவர்களில் ஒருவரைச் சந்தித்துக் கேட்டேன். அவர் சொன்ஞர், "உலகம் பார்த்துச் சிரிக்கட்டும் இவர்களாட்சியை என்று உணர்த்தத்தான் நாங்கள் இப்படிச் செய்தோம்! தட்சிணராஜ்யம் வேண்டும் என்று கூச்சல் எழுப்பினேம் என்பதற்காகத் தொண்டர்களாகிய எங்களைப் பிடித்துச் சிறையில் அடைக்க முடிகிறது காமராஜரால்? எத்தனை தடவை வாய் வலிக்க வாழ்க போட்டிருப்போம் இவருக்கு! எனினும் தனக்குப் பிடிக்கவில்லை யென்றதும் 'ஷேக் அப்துல்லா'வாக்குகிருர். நாங்கள் சாதாரணமானவர்கள் என்பதால் எங்கள்மீது போலீசை ஏவிவிட முடிகிறது—கைது செய்யச் சொல்லுகிருர் — கூண்டிலும் நிறுத்தப்படப் போகிரேம், ஆனுல் தட்சிணப் பிரதேசப் பிரச்னையைத் தூண்டிவிட்ட ஆச்சாரியாரை என்ன செய்தார் இவர்? அனுதினமும் போகிற இடமெல்லாம் தட்சிணப்பிரதேசம் குறித்துப் பேசும் நிதிமந்திரி சுப்பிரமணியத்தை என்ன செய்ய முடிந்தது இவரால்? தமிழ்நாடு காங்கிரஸ் துணைத் தலைவரே இப்படிப் பேசுகிருர்! அவரை என்ன செய்ய முடிந்தது? மதுரையிலும், திருச்சியிலும் தட்சிணப் பிரதேசக் கமிட்டிகள்கூட அமைத்திருக்கிருர்கள் சிலர் — அவர்கள் எல்லாம் 'பெரிய தலை'கள் என்பதால், எதுவும் செய்ய முடியாத இவர், சாதாரணத் தொண்டர்களாகிய எங்களைப் பழி வாங்குகிருர். வாங்கட்டும், வாங்கட்டும்" என்று உறுமினுர், அவரைப் பார்க்க உண்மையில் பரிதாபமாகத் தானிருந்தது. கதர்க்கொடி ஏந்துகிற கரங்களில் விலங்கு! பூட்டுவது, காங்கிரஸ் சர்க்கார்!! மனம் எரியத்தானே செய்யும்.

"அது சரி, சகோதரரே, காமராஜர்தான் இப்படிப பழிவாங்குகிருரே—அவருக்கு அருகிலிருந்தபடியே உங்களையெல்லாம் தூண்டி விடுகிருரே சுப்ரமணியம், அவரோ அல்லது அவரது குருநாதர் ஆச்சாரியாரோ உங்களுக்காகப் பரிந்துகொண்டு, காமராஜர் மீது ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களோ?", என்று கேட்டேன் நான். அவரால், ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை. கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு, "நீங்கள் தி. மு. க. தானே!", என்ருர். ஆமாம் என்று நான் சொல்லவும், "உங்களிடம் உண்மையைச் சொல்லி அழ வேண்டும் போலிருக்கிறது. என்னைப் போன்ற காங்கிரஸ்காரர்களுக்கு இந்த இக்கட்டான சமயத்தில் என்ன செய்வதென்றே விளங்கவில்லை. தேபரைத் தலைவராகக் கொண்ட அகில இந்திய காங்கிரசின் அமிருத சரஸ் தீர்மானத்தைக் காட்டி, உண்மைக் காங்கிரஸ்காரர்கள் தட்சிணப் பிரதேசத்துக்கே பாடுபட வேண்டும் என்கிருர் ஆச்சாரியார். அதைக் கேட்கும்போது நியாயமாகத்தான் படுகிறது. காமராஜரோ, அப்படிக் கேட்பவர்களெல்லாம் உதவாக்கரைகள், ஒன்றும் தெரியாதவர்கள் என்று சீறுகிருர். நாங்கள், எந்தத் தலைவரைப் பின் பற்றுவது? சட்டப்படி பார்த்தால் அமிருதசரஸ் தீர்மானத்தைத்தானே உண்மைக் காங்கிரஸ்காரர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்?", என்று கேட்டார்.

"சரி! உங்கள் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் தோழர் கக்கனை விசாரித்துக்கொண்டு வந்து பதில் சொல்லுகிறேன்", என்று தெரிவித்துவிட்டு, சென்னை நரசிங்கபுரத்திலிருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஆபீசுக்குப் போனேன். அங்கு யாராரோ உட்கார்ந்து ஏதோ புள்ளி விபரம் தயாரித்துக் கொண்டிருந்தார்கள்,

"என்ன விபரமாக இருக்கும்? ஒரு வேளை, எந்தெந்த மாவட்டத்தை எப்படியெப்படி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முன்னேறும்படிச் செய்யலாம் — அதற்கு எப்படியெப்படி வசதிகள் உள்ளன,'' என்பது குறித்து ஆலோசிக்கிறார்களோ, என்று எட்டிப்பார்த்தேன். அவர்கள் அந்த 'அற்ப' விஷயத்தில் அல்ல கவனம் செலுத்திக்கொண்டிருந்தது! மாவட்டரீதியாக யாரார் தங்கள் ஆட்கள் என்று கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார்கள்—காமராஜ் தலைமைக்கு ஆபத்து வந்தால் எத்தனை பேர் தங்கள் பக்கம் நிற்பார்கள் என்று புள்ளி விபரம் போட்டுக் கொண்டிருந்தார்கள். இது போன்ற சமயங்களில் அவர்கள் முகத்திலிருக்கும் வழக்கமான தெம்பு ஏனோ, தென்படவில்லை. அவர்களைப் பார்த்து, "எங்கே கக்கன்ஜீ,'' என்று கேட்டேன். என் குரலைக் கேட்டுத் திடுக்கிட்ட அவர்கள், "நாங்கள் பேசிக் கொண்டதெல்லாம் உனக்குத் தெரியுமா!'', என்று பரபரப்போடு கேட்டார்கள். "எனக்கு எல்லாம் தெரியும். ஒவ்வொரு காங்கிரஸ்காரருக்குப் பக்கத்திலேயும் எங்கள் ஆள் ஒருவர் இல்லாமலிருக்கமாட்டார். நான் இப்போது வராவிட்டாலும் எனக்கு வந்து எல்லா விபரங்களையும் சொல்ல ஆளிருக்கிறார்கள்'', என்று தெரிவித்துவிட்டு, அங்கிருந்து நுங்கம்பாக்கம் கிளம்பினேன். அங்கு தானே காமராஜர் வீடு இருக்கிறது.

வீட்டுக்குள் ஒரே பரபரப்பு—என்றுமில்லாத வகையில் யாரைக் கண்டாலும் 'வாங்க வாங்க' என்கிற உபசரிப்பும், வரவேற்பும் பலமாயிருந்தது. என்ன விசேஷம் என்று விசாரித்தபோது, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் பற்றி எல்லோரும் பேசுவதாகச் சொன்னார்கள். கக்கனைத் தேடிப்பிடித்து; இராசபாளையம் தோழர் கேட்ட கேள்வியைச் சொன்னேன். "எனக்கென்ன தெரியும்? இதோ போய் காமராஜ் அண்ணைச்சியைக் கேட்டு வருகிறேன்'' என்று உள்ளே போய்விட்டுக் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் வந்து,'' அதுதான் தீர்மானமே போட்டுவிட்டோமே. யாரும் தட்சிணப் பிரதேசத் திட்டத்தை ஆதரித்துப்பேசக் கூடாதென்று! இதுதான் எங்கள் முடிவு,'' என்றார்.

எனக்கு விளங்கவில்லை! தேபர் காங்கிரஸ் அப்படிச் சொல்கிறது, காமராஜர் காங்கிரஸ் இதுபோலக் கூறுகிறது, சரி எதற்கும், தலைவர் தேபரல்லவா? அவரைப் போய் பார்க்கலாம் என்று கிளம்பினேன் டில்லிக்கு. நேரு இல்லாததால் அவர் குழம்பிப்போய்க் கிடந்தார். "தேபர்ஜி! இது சரிதானா?'', என்றேன். "நீ கூட சந்தேகப்படாதே! நான் அப்படி நினைத்துப் பேசவில்லை. இந்தத் தாண்டன் என்னமோ தாண்டிக் குதிக்கிறார்...'', என்றார். "பீம்சிங் இதென்ன புதுக் குழப்பம்?'', என்று ஏதோ ஒரு சினிமாவில் சொல்வார்களே அந்த வார்த்தையைச்சொல்லிக் கொண்டு உட்கார்ந்தேன்! பீம்சிங் என்கிற வார்த்தையைக் கேட்டதும், "அது யார் பீம்சிங்? பஞ்சாப் ஆளா! அவரையுமா கூட அழைத்துவந்திருக்கிறாய். ஐயோ! வேண்டாம். அவரைப் போகச் சொல்லிவிடு. ஹோசியார்பூரில், பெண்களைக் காங்கிரஸ் கட்சியினரே கற்பழித்துஅக்கிரமம் செய்ததிலிருந்து எனக்கு எந்தச் சீக்கியரையும் பார்க்கப் பயமாக இருக்கிறது'', என்று பதறினார். எனக்கு உள்ளபடியே அவர் மீது அனுதாபம் வந்தது! இப்படி அப்பாவியாக யிருப்பதால்தான் இவர்களையெல்லாம் நேரு, தலைவராக்குகிறாரோ என்று எண்ணிக் கொண்டு, இராசபாளையம் தோழரின் சந்தேகத்தைக் கேட்டேன்.

"என்ன செய்வது ஞானக்கண்? உனக்குத் தெரியாததா! இப்போது காங்கிரசா, கட்டுப்பாடா எதுவும் இல்லை. எல்லாவற்றையும் 'அட்ஜஸ்ட்' பண்ணிக்கொண்டுதான் போகவேண்டியிருக்கிறது. அப்படி விட்டுக்கொடுத்து, அப்பா ஐயா என்று கெஞ்சினால் கூட இந்த மராட்டியர்கள் கேட்கவில்லை—வங்காளத்தில் காங்கிரஸ் எம். எல். ஏக்களே பிரதமர் பி. சி. ராயை விரட்டுகிறார்களாம்-பீகாரிலும் டில்லிக்கு எதிராகக் கண்டனக் குரல் எழும்புகிறது-நான் என்ன செய்வேன்? ஏதோ, நடந்தவரைக்கும் நாராயணன் செயல்! என்று இருக்கவேண்டியிருக்கிறது, பாரேன், வெளிநாட்டுக்குப்போன நேருவை நான் பாராட்டிப் பேசினேன், உங்கள் கட்டளைப்படி இந்தியா செல்லும் என்று! அதில் ஒரு குற்றம் கண்டுபிடித்து, 'இது ஜனநாயக நாடா? இல்லையா!', என்று கேட்கிறார், தாண்டன்!! என்று அழமாட்டாத குறையாய்ச் சொன்னார்.

இந்த இலட்சணத்திலிருக்கிறது காங்கிரஸ் — இங்கே சிலர், ஆகா ஊகூ என்று கூச்சலபோடுகிறார்களே காங்கிரசின் பெருமையைப் பற்றி; என்று எண்ணிக் கொண்டு காஞ்சிக்கு வந்தேன்! இராசபாளையம் தோழர்களுக்கு என்ன பதில் சொல்லுவதென்று இன்னும் புரியவில்லை எனக்கு!! ★

'சபாஷ்' வந்த வரலாறு!

1587-ல் பாரசீகத்திலே, ஷா அப்பாஸ் என்றொரு மன்னர் இருந்தார். அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த நேரத்திலே பாரசீகத்தைத் தாக்க, துருக்கியும் உஸ்பெக்கும் முயற்சித்துக்கொண்டிருந்தன. அவர்களை எதிர்த்து, பாரசீகத்தை வலிவுறச் செய்தவர் இம் மன்னர்தான். அதனால், இஸ்லாமிய நாடுகளிலெல்லாம் இவர் பெயர் பரவியிருந்தது. 1607 மார்ச்சில், இவர் இந்துஸ்தானத்தின் மீது படையெடுத்தார்.

அப்போது, ஜகாங்கீர், இந்துஸ்தானத்தை ஆண்டுகொண்டிருந்தான். அவனுடைய படைகள், ஷா அப்பாஸின் படைகளைத் தோற்கடித்துவிட்டன. திகைத்த ஷா இப்பாஸ், ஜகாங்கீருடன் நட்புறவு பாராட்டுவதாக ஒரு ஓலை அனுப்பினார். அதில், தமக்குத் தெரியாமலே இப் படையெடுப்பு நடந்துவிட்டதென்றும், தனது படைகள் ஜாங்கீர்மீது படையெடுத்ததைதாம் ஒப்புக்கொள்ளவில்லையென்றும், இஸ்லாமிய அரசுகள் இரண்டும் தோழமையோடு இருப்பதே தன் ஆசையென்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஓலையைக் கண்ட ஜகாங்கீர், ஷா அப்பாஸ் வேலையைப் பாருங்கள்! தோற்றதால்வந்த இழிவு தனக்கு வரக்கூடாது என்பதற்காக இப்படிக்கூறி தப்பிக்கொள்ளுகிறார் என்ன இருந்தாலும் பெரிய புத்திசாலியல்லவா? என்றானாம். அது முதல், மெச்சத்தக்க காரியங்களை யார் செய்தாலும் "ஷ அப்பாஸ்" என்று கூறுவது பழக்கமாகி. உர்துவில் அச்சொல் 'ஷபாஸ்' ஆகி, இங்கு 'சபாஷ்!' என்று மருவி விட்டதாகக் கூறப்படுகிறது.

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத் தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

நிர்வாகி

ஒன்றாகிவிட வேண்டும்

"கீழ் ஜாதிக்காரர்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் இடையே சமத்துவம் நிலவச் செய்ய வேண்டுமென்றால்—பார்ப்பனர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டேயாகவேண்டும். இந்த அநீதி தற்காலிகமாக வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் பல ஆயிரக்கணக்கான வருடங்களாக 'சூத்திரர்களுக்கு' இழைக்கப்பட்டிருக்கும் அநீதியை ஒழிப்பதற்கு மேற்கண்ட தற்காலிக அநீதி பயன்படும்: மேலும் நீதியும், சமத்துவமும் நிலவுகிறபுது சகாப்தம் உதயமாகும், பார்ப்பனர்கள் சாதிப் பிரிவினையற்ற அடிப்படையில் தகுதியொன்றைமாத்திரம் காரணம் காட்டி சமத்துவம் கோரினார்கள் என்றால் அவர்கள் இரண்டுவித குற்றங்களுக்கு ஆளாகிறார்கள்.

இந்திய மக்கள் முழுக்க முழுக்க ஒன்று சேர்ந்து பெரியவர்களாவது என்பது அல்லது முன்னேற்றம் காண்பது இயலாத காரியம். தகுதி ஒன்றைமட்டும் அடிப்படையாக வைத்து சமத்துவம் காண சோஷலிஸம் முயன்றால் சோஷலிஸத் தத்துவம் உண்மையில் பேதத்திற்கு வழி வகுக்கும் தத்துவமாகவே ஆகிவிடும். மேல்சாதிக்காரர்களும்கூட சர்வதேச அடிப்படையில் பார்க்கப்போனால் பிற்பட்ட வகுப்பினர்களையே சார்ந்தவர்களாவார்கள். தான் வசிக்கின்ற சமூகத்தில் வேண்டுமானால் இவன் தன்னை உயர்ந்தவன் என்று சொல்லிக்கொள்ளலாமே தவிர அமெரிக்கனுக்கோ, ரஷ்யனுக்கோ, ஈடாக இவன் எப்போதும் கருதப்படுவதில்லை.

இந்தியாவில் பிற்பட்ட வகுப்பினரின் தொகை 15-கோடியானால்—அவர்களிலும் தாழ்த்தப்பட்டவர்களாக 6-கோடி ஹரிஜனங்கள் இருக்கிறார்கள். இவர்களின் முன்னேற்றம் அதிவேகமாக நிகழ்ந்தாகவேண்டும்.

தாழ்த்தப்பட்டவர்களும், பிற்பட்டவர்களும் முன்னேறுவது என்றால் பார்ப்பனர்களோடு அவர்களும் சேர்ந்து வெள்ளை மனிதர்களின் தரத்திற்கு அவர்களும் உயர்வது என்று அர்த்தம். வெள்ளையர் தரத்திற்கு உயர்வது என்பது — வெள்ளையர்களைப்போல நாமும் ஆவது என்பதல்ல. வெள்ளையன் செய்கிற பல காரியங்களை நாம் செய்வதில்லை. மேல் சாதிக்காரர்கள் இந்தப் பிரச்னையின் தீவிரத்தை உணர்வதோடு தங்கள் முன்னோர்கள் செய்த தவறை தாங்களும் செய்யாமல் இருக்கவேண்டும். சில மேல் சாதிக்காரர்களின் கொள்கை, பேச்சு நடத்தை ஆகியவற்றில் மாற்றம் தென்பட்டாலும் அது வழக்கத்திற்காக இருப்பதுபோல் இருக்கிறது. மாறுதலோடு ஒரு உத்வேகமும் தேவை. இன்னும் சிலர் சுயநலத்திற்காக மாறுதலை ஏற்றுக்கொள்கிறார்கள். மேல்சாதிக்காரர்களின் அறிவாற்றலும் கீழ்சாதிக்காரர்களின் உணர்ச்சி பூர்வமான செயலும் இணையவேண்டும். அப்பொழுதுதான் இந்த நாட்டில் நீதி நிலவும் என்று நான் ஒப்புக்கொள்வேன்.

பார்ப்பனர்களுக்கும், பனியாக்களுக்கும் வாழ்க்கையில் மிகச் சிறந்த நாள் எது என்று என்னைக் கேட்டால் தாங்கள் ஆளப்பிறந்தவர்கள் என்ற எண்ணத்தை அவர்கள் என்று கைகழுவுகிறார்களோ, அந்த நாள்தான் என்று சொல்வேன். பிற்பட்ட வகுப்பினர்கள் மத்தியிலும் ஒரு விதமான தோல்வி மனப்பான்மை நிலவி வருகிறது. சக்தி வாய்ந்தவர்களாகவும், முன்னேற்றப் பாதையிலும் அவர்கள் வரும்பொழுது மேல் சாதிக்காரர்களின் பழக்க வழக்கங்கள் நடத்தைகளை காப்பியடிக்கிறார்கள். இந்தத் தவறையும் நாம் போக்கியாக வேண்டும். தலைமை என்பதன் உண்மை அர்த்தத்தை பிற்பட்ட வகுப்பினர் புரிந்துகொள்ள வேண்டும். கீழ் சாதிக்காரர்களின் உணர்ச்சிகள், தொல்லைகள் ஆகியவற்றைக் கிளப்பி விட்டு தலைமைஸ்தானத்தை ஒரு சிலர் அபகரித்துக் கொள்கிறார்கள். இடம் கிடைத்தவுடன் சுயநல நோக்கத்திற்கு அந்தப் பாதையை உபயோகப் படுத்திக் கொள்கிறார்கள். ஆகவே பிற்பட்ட வகுப்பினர்களின் தலைவர்கள் பார்ப்பன, பனியா ஆதிக்கத்தை எதிர்த்து கூச்சல் போடுவதெல்லாம் மக்களின் நலனுக்காக அல்லாமல் சொந்த நலன்களுக்கே பயன்படுகிறது என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

சாதி முறைகளை ஒழிக்க வேண்டும் என்கின்ற ஆர்வம். அதைப் பின் தொடர்ந்து வருகின்ற முயற்சிகள், மேல் சாதிக்காரர்களை எதிர்த்து ஆத்திர மூட்டுவதோடு மட்டும் நின்று விடக்கூடாது. மேல் சாதிக்காரர்களிடத்தில் ஏற்படுத்துகின்ற தீய விரோதம் சமத்வப் பிரச்னைகளில் ஒத்துபோகும் தன்மையை ஏற்படுத்தும். அல்லது திறமைக் குறைவை உண்டாக்கும், வேறு எந்தவித விசேஷ அறிவும் பெறாதவராக இருக்கும் ஒருவர் பிற்பட்டோர் என்ற ஒரே காரணத்தினால் நல்ல நிலைமைக்கு வந்துவிடுவார். இந்நிலையில் கீழ் சாதியிலே இருக்கின்ற திறமையானவர்கள்கூட இந்த தீய விரோத உணர்ச்சியை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ளத் தெரியாத காரணத்தினால்—பின் தங்கி இருப்பார்கள். ஆகவே 15 கோடி சூத்திரர்களும் — 6 கோடி ஹரிஜனங்களும் — பார்ப்பனர்களைப் போன்ற 9 கோடி மேல் சாதிக்காரர்களுடன் ரசத்தில் உப்பு கரைந்து விடுவதுபோல—கலந்து ஒன்றாகிவிட வேண்டும்." என்று 'சோஷியலிஸ்டு' ஏட்டில் லோகியா தீட்டியுள்ளார்.

★

ஆபிரிகாவில், கருப்பரை நடத்தும் கொடுமை குறித்து, கண்டிக்கத் தவறாத 'இந்து' ஏடு, பிரமாதமாகப் பிரசுரிக்கிறது இச் செய்தியை.

ஜூன் 29ந் தேதி சென்னையில் 27 சிறுவர்களுக்கு உபநயனம், இலவசமாகச் செய்யப்பட்டதாம்.

சங்கராச்சாரி அனுப்பிய 'பிரசாதம் வழங்கப்பட்டதோடு, கே. பாலசுப்ரமணிய அய்யர், டி.எல். ராமசாமி அய்யர், சி.ஆர். பட்டாபிராமன், என். ரகுநாத அய்யர், வைத்ய சுப்ரமணிய அய்யர் முதலிய பிரமுகர்கள் கலந்துகொண்டு சீரும் சிறப்புடன் நடத்தி வைத்தனராம், இவர்களில் பலர், அரசியலிலும், பத்திரிகைத் துறையிலும் ஈடுபட்டிருப்பவர்கள்.

உபநயனம் என்பது, தாம் மேல் சாதி என்பதை அறிவிக்கும் அடையாளமாக பூணூல் தரிக்கும் விழாவாகும்.

எல்லோரும், சாதிபேத தீதுகள் ஒழிய வேண்டுமென்று முழக்கும் போது, இது போன்ற விழாக்களை இலவசமாகச் செய்ய முன் வருகிறார்கள், பார்ப்பனத் தலைவர்கள். இந்தப்போக்கு, எதில் கொண்டு போய்விடும்? எண்ணக் கோருகிறோம், பார்ப்பன முற்போக்காளரை!

6-ம் பக்கத் தொடர்ச்சி

சிக்கிய சீமான்கள் கூழாகிப் போயினர்!—இவ்விதமெல்லாம் வெற்றி பற்றிய பிரதாபம் பரப்பப்பட்டது; இது மூட்டிவிட்ட அச்சம், பலரை அரசியலைவிட்டு ஓடிவிடச் செய்தது; பலர், 'பாதுகாப்பான இடம், பலம் பொருந்திய இடம்' என்று வாதிட்டனர், பலம் பொருந்திய இடம், காங்கிரஸ் கட்சி, எனவே அதிலே சென்று தங்கிவிட்டால் பயமில்லை என்று கருதினர்; அதுபோலவே செய்தும் காட்டினர்.

காங்கிரசை எவராலும் எதிர்த்து வெற்றி பெற முடியாது— எப்படிப்பட்ட கன-தனவான்களெல்லாம் தோற்றோடினர் தெரியுமா!—என்று பேசத் தலைப்பட்டனர். அச்சம் புகுந்தது—அடிபணிந்து விடுவதும், இச்சகம் பேசுவதும், இளித்துக்கிடப்பதும் பிழைக்கும் வழி என்று மேட்டுக் குடியினர், மேனா மினுக்கிகள், துரைத்தனத் துதி பாடகர்கள் கருதினர்—காங்கிரசில் நுழைந்தனர்.

தேர்தலில், காங்கிரஸ் பெற்ற வெற்றிக்குக் காரணம் என்ன? தோற்றவர்களுக்கும் பொது மக்களுக்கும் தொடர்பு எவ்வண்ணம் இருந்தது? தோற்றவர்கள் தமது கட்சியினை எந்த முறையில் அமைத்திருந்தனர்? கட்சித் தொண்டர்கள் எவ்வளவு கசப்புடன் உழன்று கொண்டிருந்தனர்? என்பன பற்றி எண்ணிப் பார்த்திட அச்சம் இடம் தரவில்லை! காங்கிரசை எதிர்க்க முடியாது—எதிர்ப்போர் பிழைக்க முடியாது — சந்தேகமிருந்தால், பித்தாபுரத்தைப் பார், பொப்பிலியைக் கவனி, சீமான்களின் கதியைப் பார், சிற்றரசர்கள் தோற்றோடின சேதியைக் கேள்!-என்று கூறினர்.

பீதி பிடித்துக்கொண்டது; இந்தச் சூழ்நிலையை வாய்ப்பாக்கிக் கொண்டு, காங்கிரஸ், தேர்தல் களத்திலே மேலும் பல வெற்றிகளைப் பெற்றது; அந்த வெற்றிகள், மற்ற மற்றக் கட்சிக்காரர்களின் மன மருட்சியை அதிகமாக்கிற்று, இனி நமக்கு ஈடும், எதிர்ப்பும் இல்லை,—என்று இறுமாந்து கிடந்திட முடிந்தது காங்கிரஸ் கட்சியினால்.

ஆளும் கட்சியிடம் எவர் தட்டிக் கேட்க முடியும் என்ற இறுமாப்பும், மற்றக் கட்சிகளிடம், காங்கிரசை எவ்விதம் எதிர்த்து நிற்க முடியும் என்ற அச்சமும், ஒருசேர இருந்து

> இளைஞர்களே! உங்கள் தமிழ்த்தாய் நேற்றுப் பிறந்தவள் அல்லள்; இன்று பிறந்தவள் அல்லள்; அவள் மிகத் தொன்மையுடையவள்; கலைகளையுடையவள்; அவளையா கொல்வது? தாய்க்கொலை புரிவதா தமிழர் வீரம்? வீரத்துக்குரிய உங்கள் இளமுகம் நோக்கிக் கேட்கிறேன். நேற்றும் இன்றும் பிறந்த நாடுகளையும் ஓம்பவும், பெருக்கவும் அவ்வந்நாட்டார் முயன்று வருகின்றார். நாமோ-பாவிகளாகிய நாமோ—பழம்பெரும் நாட்டை மறக்கப் பார்க்கின்றோம். தமிழ் இறந்தபின் தமிழ் மண் மட்டுமிருந்தென்ன?...மொழி இறந்துபடின் நாடும்இறந்து படுமன்றோ?
>
> —திரு. வி. க.

விட அனுமதித்துவிட்டோமானால் தம்பி; பிறகு நாட்டிலே சர்வாதிகாரம் தலைவிரித்தாடுவதைத் தவிர்த்திட முடியாது. சர்வாதிகாரம் ஏற்பட்டுவிட்டால்; அரசியல் நடவடிக்கை பற்றிய எண்ணம் கூட மக்களுக்கு எழாது—எழ விடமாட்டார்கள்! இந்தப் பயங்கரச் சூழ்நிலையை ஒழித்தாக வேண்டுமானால், அச்சத்தைத் துடைத்துக்கொண்டு, அல்லல், அவதி, ஆயாசம் கொள்ளாமல், ஜனநாயகக் கடமையைச் செய்வதற்கு, கட்சிகள் துணிவுகொள்ள வேண்டும். நாம், தேர்தலில் ஈடுபட முடிவு செய்தது, இந்த நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு தான் என்பதை மறவாதே!

நாம் இந்த முடிவு எடுக்காமுன்பு காங்கிரஸ் கட்சி இந்த முறை, தேர்தல் என்பது, மிகச் சாதாரணமான நிகழ்ச்சியாக இருக்கப் போகிறது, எதிர்ப்பு அதிகம் எழாது, பல இடங்களில் 'போட்டி'யே இருக்காது, என்று மனப்பால் குடித்தது. காங்கிரசின் தலைவர்கள், தமக்குப் புதிய நேசமும் பாசமும், கூட்டுறவும் கிடைத்திருப்பதால், புதிய பலம் கிடைத்துவிட்டது, எனவே தேர்தலைக் குறித்துக் கவலைப்படத் தேவையேயில்லை, கேட்டால் தருகிறார்கள், வேறு யார் இருக்கிறார்கள் எதிர்த்து 'ஓட்டு' கேட்க, என்று எண்ணி இருந்தனர்.

இப்போது, தம்பி, சென்னை முதலமைச்சர், 'தேர்தல் பிரசார காரியாலயம்' துவக்கிவிட்டார்! நிதி அமைச்சர், பிரசார முறைகள் பற்றிய யோசனைகளைக் கூறிவிட்டார்! தரகர்கள் திக்கெட்டும் கிளம்பிவிட்டார்கள்! ஆட்பொறுக்கும் அலுவலில் அனுபவம் பெற்றவர்கள்; பணம் இருக்கும் இடத்தை மோப்பம் கண்டுபிடித்துக் கூறுபவர்கள், பஞ்சதந்திரம் அறிந்தவர்கள், பாசவலை வீசுவோர், நேசக்கரம் தேடுவோர், வாக்களித்து வலையவைப்போர், எனும் பல்வேறு துறையினர், கிளம்பிவிட்டனர்!

ஒருகை பார்க்கிறேன் என்போரும், ஒழித்துக் கட்டுகிறேன் என்று உறுமுவோரும், வென்று முடிந்துவிடுவேன் என்று செப்புவோரும், காலைவாரிவிடுவேன் என்று கூறுவோரும் ஊராகச் செல்கிறார்கள்.

'முதலியாரவாள்! நாயுடுகாருக்குச் சொல்லுங்கள், படை

யாச்சி நம்ம பக்கம்தான் என்று! ரெட்டியார் பக்கம் நான் சாய்ந்து விடுவேன் என்று கோனார் பேசின தாகப் பிள்ளை கூறினார், நீங்கள் அதை எல்லாம் நம்பவேண்டாமென்று சொல்லுங்கள்; நம்ம நாடார் ஒரு போதும் சொன்ன சொல்லைத் தவற மாட்டார்; அதெல்லாம் ஐயர் ஐயங்கார் வேலை என்பதை விளக்குங்கள்; கவுண்டர் போட்டிக்குக் கிளம்பு வாரோ என்று சந்தேகம் வேண்டாம்; அவர் விஷயமாக தேவர் கூறிவிட்டார்" என்று இப்படி, தேசியக் கட்சி, 'ஜாதீயம்' பேசிக்கொண்டு படை திரட்டிக்கொண்டிருக்கிறது.

இவரை நிறுத்தினால் அவருக்குக் கோபம் வருமோ?

இவருக்கு அவர் வேண்டியவரா?

இவர் அவருக்குப் 'பாக்கி' சேர வேண்டுமாமே, உண்மைதானா? என்ற ஆராய்ச்சிகள் மும்முரமாக ஆரம்பித்துவிட்டன!! இதற்காகவே தனிப் பயிற்சிபெற்றவர்கள் சுறுசுறுப்பாகிவிட்டனர்.

செங்கிஸ்கான் வருகிறானமே' ஐயோ, செத்தோம் — என்று பீதியுடன் பேசிய நிலை போய்விட்டது, செங்கிஸ்கான் வரட்டும் அவன் செவிட்டில் அறைகிறேன் என்று சின்னப்பயல் சீறிப் பேசுகிறானமே செச்சே! நாம் பயந்து சாவதா, நாமும் எதிர்த்து நிற்கவேண்டியது தான், வரட்டும் செங்கிஸ்கான்!!— என்று வீரம் பேசும் நிலை ஏற்பட்டு விட்டது.

எல்லாம், ஏன்? நாம், தேர்தலில் ஈடுபடத் துணிந்ததால் மட்டுமல்ல, நாம், தேர்தலில் ஈடுபடத் துணிந்தது கண்டு, தேர்தலில் காங்கிரசை எப்படி எதிர்ப்பது என்று பொதுவாகவே பலருங்கொண்டிருந்த **அச்சம் உடைபட்டுப் போய்விட்டது என்பதனால்.**

பேழை பலமோ, பெரும் பத்திரிகைகளின் பிரசார பலமோ, அனுபவ பலமோ அற்ற நாமே தேர்தலில் காங்கிரசை எதிர்த்து நிற்க முடியும் என்று துணிந்து தீர்மானித்தானது கண்டு, பலருக்குக் 'குளிர்' நீங்கிவிட்டது; இந்தப் 'பயல்களே' தைரியமாகக் கிளம்பும்போது, நாம் மட்டும் காங்கிரசுக்குப் பயப்படுவானேன், பார்ப்போம் நாமும் நம்மால் ஆனதை என்று கிளம்புகிறார்கள்.

தி. மு. க. கேவலம் வகுப்பு வாதம், நாத்திகம், பேதம் பிளவு ஆகிய தீதான கொள்கைகளைப் பேசிக்கொண்டு திரியும் செல்வாக்கற்ற சிறு கும்பல்—இது கிளம்புகிறது, தேர்தலில் காங்கிரசுடன் போட்டியிட! நமக்கு எத்தனை எத்தனை மேதைகள் தந்த தத்துவங்கள் உள்ளன, எவ்வளவு விரிந்த பரந்த, புதுமை செறிந்த புரட்சி நிறைந்த திட்டங்களை நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம், நாம் வேகமாகக் கிளம்பாமலிருக்கலாமா? நாமென்ன, தி. மு. க.வைவிட வீரதீரத்தில் மட்டமா? என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டு ஒவ்வொரு இடதுசாரிக் கட்சியும் கச்சையை வரிந்து கட்டுகின்றன, களத்தில் கையாளவேண்டிய முறைகள் பற்றிக் கூடிப் பேசுகின்றன! தம்பி! ஒரு ஆறு திங்களுக்கு முன்பிருந்த 'திகைப்பு' போயேவிட்டது, சூடுபிடித்திருக்கிறது, சுறுசுறுப்பு ஏற்பட்டுவிட்டது, கதவில்லா வீடல்ல, தாளிட்டு, காவலும் வைத்திருக்கிறது, என்று தேர்தல் பற்றி காங்கிரஸ் கவலையுடன் எண்ணிட வேண்டிய கட்டம் பிறந்திருக்கிறது; எனக்குக் களிப்பு இதனால் நிச்சயமாகப் பிறக்கிறது; ஏனெனில் நான் இதைத்தான் விரும்பினேன், எதிர்பார்த்தேன், ஏமாறவில்லை.

செல்லும் இடமெல்லாம், தி. மு. க. தேர்தலில் ஈடுபடப்போகிறதா என்ற செய்தியை, நம்து பிரதம பிரசாரகர் போலிருந்துகொண்டு, முதலமைச்சர் காமராஜரே கூறிக்கொண்டு வருகிறார்!

வீணான தொல்லையை ஏற்படுத்திவிட்டானே, பாவி' என்று காமராஜர் கைபிசைந்துகொள்கிறார்—அவர் பேச்சு ஒவ்வொன்றும் அதைத்தான் காட்டுகிறது.

கைபிசைந்து பயன் இல்லை, கண்சிமிட்டவேண்டும் என்று முறை கூறுகிறார் நிதி அமைச்சர்.

ஆடலும் பாடலும் உண்டாம் நாடகம் நடத்திக் காட்டப்போகிறார்களாம்! சினிமாக் காட்சியும் இருக்கிறதாம்! இப்படிப்பட்ட முறைகளை எல்லாம், தேர்தலுக்குப் பயன்படுத்தப் போகிறார்களாம்! யார்? **நாடகமாடுவதை நையாண்டி செய்த நாடாளும் கட்சியினர்.** ஏன்? இந்த முறைகளிலே, நாம் பயிற்சி பெற்றவர்கள, பொது மக்கள் இதனால் மயங்கிவிடக் கூடும் என்று எண்ணம்! எனவே இவர்களென்ன, நாங்களும்தான், நாடகம் நடத்தப்போகிறோம் என்று நாடாளும் கட்சி பேசுகிறது.

அவர்களுக்கு, நாடகம் நடத்த நிரம்ப வசதி இருக்கிறது என்பது உனக்கும் எனக்கும் நன்றாகத் தெரியும்! ஐம்பது என்பதை நூறு என்று வீசினால், நாடகமாட யாரும் வருவார்கள் என்றுதான் காங்கிரஸ் தலைவர்கள் எண்ணிக்கொண்டுள்ளனர்; அவர்கள் எண்ணுகிறபடி பல நாடக நடிகர்கள், இணங்கவும் கூடும். ஆடவும் பாடவும் ஆட்களுக்கு என்ன பஞ்சமா?

எடுத்துக் காட்டுக்காகக் கூறுகிறேன் — என் வாக்கு பலித்துவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை — குமாரி கமலாவை, அழைத்து ஐந்தாண்டுத் திட்டப் பிரசாரத்துக்கான நாட்டியம் அண்ணாமலை மன்றத்தில் ஏற்பாடு செய்து, அதற்கு, பட்டம் பெற்ற சுப்புலட்சுமியைப் பக்கப்பாட்டுப் பாடச் செய்தால், 'பிரம்மானந்தமாக' இருக்கிறது என்று, பாக்கார்டிலும், ஓல்ட்ஸ்மோபைலிலும், செவர்லேயிலும் பியாட்டிலும் வருகிற கனவான்கள் பூரித்துக் கூறாமலா இருப்பார்கள்.

அஞ்சு! அஞ்சு! அஞ்சு!
எல்லாம்
அஞ்சு! அஞ்சு! அஞ்சு!

என்ற பாடலைத் துவக்கி, குமாரி கமலா அரங்கத்தில் நின்று, அதற்கான அபிநயம் காட்டி,

பூதம் அஞ்சு
பஞ்ச பூதம் அஞ்சு

பாண்டவர் அஞ்சு
பஞ்சபாண்டவர் அஞ்சு

தந்திரம் அஞ்சு
பஞ்ச தந்திரம் அஞ்சு!

நேரு மந்திரம் அஞ்சு
பஞ்சசீலம் ஐஞ்சு!

என்று பாடலை, விழியாலும், விரலாலும், இடை நெளிவாலும், உடை வளைவாலும், காலாலும், கழுத்து அசைவாலும், விளக்கிக் காட்டினால்போதாதா? ஐந்தாண்டுத் திட்டத்தின் அதியற்புதச் சாதனைகளை, விளங்கிக்கொள்ளவா, மாட்டார்கள்! வீடு சென்றதும் குமாரிகளும், பாலாக்களும், பாய்களும்,

ஐஞ்சு! ஐஞ்சு! ஐஞ்சு!

என்று பாடுவர், பரதம் காட்டுவர், அவர் பதிகளோ,

பாணம் அஞ்சு!
பஞ்ச பாணம் அஞ்சு!
மன்மதன் ஏவும்
பாணம் அஞ்சு

என்று பாடிக் கொஞ்சுவர்!

புரிகிறது! இனிப்புக்கூடச் சுரக்கிறது! ஆனால், இவைகளின் மூலம், இன்னலால் தாக்குண்டு, இல்லாமையால் இடர்பட்டுக் கிடக்கும், மக்களை, மயக்கிடவும். அவர் தம்உள்ளக்குமுறலைமாய்த்திடவுமா முடியும்! நிச்சயம், அந்தப் பலன் கிட்டாது என்பதை, அவர்கள்

ஆட்டமாடி
பாட்டுப்பாடி
அழகான ஜதை காட்டி

பார்த்த பிறகு தெரிந்துகொள்வார்கள்!

ஆனால் ஒன்று, தம்பி நம்மைவிட அவர்கள், பளபளப்பு அதிகம் காட்ட முடியும், நாடகங்களில்.

பேச்சு மேடையே, தெரியுமா, நாமும்தான் ஓயாமல் பேசுகிறோம், ஊரூர் சென்று பேசுகிறோம், ஒரு நாளைக்கு இரண்டு மூன்று கூட்டம்கூடப் பேசுகிறோம், மேடையில் ஏறியதும், நாம்ஆட, நாற்காலி உடனாட, ஒலிபெருக்கி தானும் ஆட!—என்ற முறையிலே அமைப்பு இருந்திடக் காண்கிறோம். தேர்தல் வருகிறது என்ற உடன் அலங்காரமான மேலிட அமைப்பே ஒன்று இரண்டாயிரம் ரூபாய் செலவிலே புதிதாகக் கண்டு பிடித்து விட்டார்களே! மரத்தாலான மேடை! இரும்பாலான கால்கள்! பூட்ட ஒன்றரை மணி நேரம் பிடிக்குமாம்! கழற்ற முக்கால்மணிதானும்! மேடையில் இருபது பேர் அமரலாமாம்! கண்டனராம் காங்கிரஸ் மந்திரிமார், களிபேருவகை கொண்டனராம்.

இனி என்ன குறை! கோவைக்கு ஒன்று, மதுரைக்கு இரண்டு, நெல்லைக்கு ஒன்று, சென்னைக்கு நாலு என்று, காங்கிரஸ் கட்சியால் இந்த 'புதிய அமைப்பு' வாங்கிப் பயன்படுத்த முடியும்! பணம் இருக்கிறது, கொள்ளை கொள்ளையாக!

தம்பி! அவர்களின் வேலை துவங்கிவிட்டது. நாம்? அந்தக் கேள்வியை, நாம் ஒருவருக்கொருவர் கேட்டுக்கொண்டே இருந்தால் வேலை ஏதும் நடவாது, எனவே, அவரவர்க்குக் கிடைக்கும் வாய்ப்பினைப் பயன்படுத்தி அவரவர்க்கு உள்ள துறையில், அவரவர்க்கு உள்ள 'சக்தியுக்தி'க்கு ஏற்ப வேலை செய்யவேண்டியதுதான்.

ஒன்று நான் கூறுவேன், நீயும் அறிவாய், அவர்கள் எந்தக் காரியத்துக்கும், பணம் கொடுத்து, பசை காட்டி, ஆட்களை இழுத்துக் கொண்டு வரவேண்டும்; நாமோ, பணமற்றவர்கள், எனவே 'கூலிக்கு மாரடிக்க' ஆட்கள் தேடமாட்டோம், கொடி பிடிப்பதிலிருந்து கூத்து ஆடுவது வரையில், நாமேதான் செய்யப்போகிறோம்; திறமையாகச் செய்யப்போகிறோம், ஏனெனில் நம்பிக்கை ஒன்று மட்டுமே தரும் ஆர்வம் நம்மிடம் நிரம்ப இருக்கிறது; நாட்டுக்கு எடுத்துக் காட்டுவதற்கு ஏராளமான காட்சிகள் உள்ளன!

நாடகம் நடத்த நாடாள்வோர் துவக்கப்போகிறார்களாம்! அந்த நன்னாளை, நான் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்! ஆடட்டும்!

ஆனால், தம்பி, எங்கே உன்னுடைய நாடகக் குழு! இன்றே, குழுவின் அவசரக் கூட்டம் நடைபெறட்டும், நாடகம் தயாராகட்டும்! நாட்டு நலிவுபற்றிய விளக்கம் நாடாள வந்தவர்கள் தந்த வாக்குறுதிகள் யாவும் பொய்த்துப் போனது பற்றிய விளக்கம், நம்மவர் படும் துயரம், நாடாள்வோர் அதற்குக் கூறும் சமாதானம் இவை பற்றிய, நாடகங்கள், நால்வர், அறுவர், பதின்மர்கொண்ட குழுக்களால், எளிமையும் இனிமையும் கொண்ட முறையில், முச்சந்திகளில், நடத்திக் காட்டப்பட வேண்டுமே! நாமென்ன, குமாரி கமலா, சமூக சேவகி சாருபாலா, சங்கீத கலாநிதி சாம்பமூர்த்தி என்போருக்குச் 'சன்மானம்' கொடுத்து 'சபை'யை ரம்மியமான தாக்கிக் காட்டவா முடியும்! நமக்கு நாமே! ஆனால், அந்த நாம் என்பதிலே உள்ள திருவும் திறமும் சாமான்யமானதல்ல! அதை மறவாதே!

உன் குறும்புப் பார்வை எனக்குப் புரிகிறது தம்பி, புரிகிறது! அண்ணா! நாடகம் ஆடு என்று யோசனை கூறிவிட்டால் போதுமா? நாடகம் வேண்டுமே, எங்கே நாடகம்? என்றுதானே உன் பார்வை பேசுகிறது. பொல்லாதவனல்லவா நீ! சமயம் பார்த்து, என்னை வேலை வாங்கி வாங்கிப் பழக்கப்பட்டுப் போய்விட்டாய்! சரி, நாடகமும் தருகிறேன்! 'கூடு'மட்டும்—எழில் உருவம் அமைத்துக்கொள்ள உனக்கா தெரியாது—நாடகம் இது முதலாவது! இனித் தொடர்ந்து பல நாடகமும் தருகிறேன்; உன் குழுவினைக் குதூகலமாகப பணியாற்றச் சொல்லு.

இந்த நாடகத்தின் பெயர் "பெரியமனுஷா, அபபடித்தான்!" என்பதாகும்.

அடுத்த 'கிழமை' நாடகம்! அதுவரை உன் ஆவலைச் சிறிது அடக்கிக்கொண்டிருக்கத்தான் வேண்டும், இங்கு அடிகள் இடம் இல்லை என்று கூறிவிட்டார்.

அன்பன்,

அண்ணாதுரை

திராவிடநாடு

ஒருவரைப்பற்றி ஒருவர்!

இரஷ்யா, பிறநாட்டுச் செய்திகளைத் தரும் ஏடுகளைத் தமது நாட்டுக்குள் நுழைய விடுவதில்லை என்று பொதுவாகக் கூறப்படுவதுண்டு.

அமெரிக்காவும், கம்யூனிஸ்டுப் பிரசுரங்களையும் சோவியத் செய்திகளையும், தன்னாட்டுக்குள் தாராளமாக அனுமதிப்பது கிடையாது என்று குற்றம் சாட்டப்படுவதுண்டு.

இரு முனைகளைத் தாங்கியிருக்கும் இவ்விரு நாடுகளும், கடந்த 16ஆம் தேதி ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளனவாம், அதன்படி, அமெரிக்காவில் சோவியத் செய்திகளைத் தாங்கிய ஒரு இதழ், இரஷ்யத் தூதரால் பிரசுரம் செய்யப்படும். அதேபோல அமெரிக்க சர்க்காரின் வெளியீடான 'அமெரிகா' எனும் ஏடும், இரஷ்யாவில் வெளியிடப்படும்

இப்படி, ஒருவரையொருவர் பகைத்துக்கொண்டிருக்கும் நாடுகளே, தமது மக்கள்முன் இருதரப்புக் கொள்கைகளையும் வைக்க முன்வந்துள்ளன.

இதுவரை அவர்கள் தயங்கியதற்குக் காரணம், அச்சமும் அலட்சியமுமாகும்.

இரஷ்யாவும் அமெரிக்காவுமே இப்போது இது விஷயத்தில் சமரசமாகி விட்டன—மக்களின் தீர்ப்புக்கு, விடுவோம் என்ற கருத்தால்.

இங்கே, ஏடு நடத்தும் மகானுபாவரும் ஆட்சியாளருமோ, ஒரே ஒரு கொள்கையைப் பற்றிய விஷயங்கட்குத்தான் ஆதரவும் விளம்பரமும் தருவோம் — எதிர்க்கட்சியினருக்கென்றால், வானொலியும், செய்திக் கதிர் சித்திரமும் அளியோம், என்று இருந்து வருகிறார்கள். அங்கே, அச்சம் அகன்றிருக்கிறது! இங்கோ, எங்கே 'நாம் வளர்ந்து விடுவோமோ' எனும் பயம் இவர்களைப் பிடித்தாட்டுகிறது!

ஒருவரைப்பற்றி ஒருவர் அறியவும், புரியவும்; பரஸ்பரம் ஒருவர் கருத்தை மற்றொருவர் தெரிந்துகொண்டால்தான் வாய்ப்பேற்படும். ★

ஒரு கோடி 'கோவிந்தா!'

"மாடல் சோஷியலிசம் எமது! அது அமுலாகும் விதத்தைப் பாரீர்!" என்கின்றனர், காங்கிரஸ் தலைவர்கள்.

அதற்கு அறிகுறியாகச் சில தொழில்களைத் தேசிய மயமாக்குகிறோம் என்றும் செய்து வருகிறார்கள்.

தனிப்பட்ட டாடா பிர்லாக்களின் சுகபோகச் சோலையாக இருக்கும் தொழில்களை, சர்க்காரே ஏற்று நடத்துவது வரவேற்கக்கூடியதாகும்.

அதனால்தான், இன்ஷியூரன்ஸ் தொழில் தேசியமயமாக்கப்பட்டதும் வரவேற்றோம்.

ஆலைகள், பாங்குகள், போக்குவரத்துத் துறைகள் முதலியவைகளைச் சர்க்காரே ஏற்று நடத்துவது பலனும் நலனும் தரும்.

தனிப்பட்டவர்களிடமிருந்து எடுத்து, இத்துறைகளை நிர்வகிக்கும்போது அவர்களைவிடத் திறமையாக நடாத்தி, அதில் உள்ள நன்மைகளை மக்களுக்கு எடுத்துக் காட்டவேண்டும்.

ஆனால், நம்ம சர்க்கார், பணத் திமிங்கிலங்கள் பார்த்து "பார், பார்! நாங்கள் நிர்வாகம் நடத்திய போது இப்படியா நடந்தது?" என்று ஏளனம் செய்யுமளவுக்கு, நடந்துகொண்டு வருகின்றனர்.

உதாரணத்துக்கு, சென்னை நகரில் ஓடும் சர்க்கார் பஸ்களைக் குறிப்பிடலாம்! ஏடுகள்தான் ஏசுகின்றன, பேசுகின்றன என்பதல்ல; மக்களும் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு செல்வதென்றால் அனுபவிக்கும் கஷ்ட நஷ்டங்கள் சொல்லுந் தரமல்ல.

வரவேண்டிய அளவுக்கு இலாபமும் கிட்டுவதில்லை! காரணம் செலவினம், திறந்துவிடப்பட்ட வாய்க்கால்போல் ஓடிக்கொண்டிருக்கிறது. வரும் டயர்கள், வண்டிச் சாமான்கள் எல்லாம் 'வெளியில்' விலை கூறப்படுவதாகக் குற்றம் சாட்டப்பட்டு வருகிறது!

இது, சர்க்காரின் நிர்வாகத் திறமையின்மையின் விளைவாகும்.

இந்தக்கிழமை, டில்லி சர்க்கார், தாங்கள் இரண்டாண்டுகளுக்கு முன்பு முதலாளிகளிடமிருந்து ஏற்றுக்கொண்ட விமானப் போக்குவரத்தின் இந்த ஆண்டின் வரவு செலவை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஒரு கோடி ரூபாய், நஷ்டமாம்!

லட்சம், பத்து லட்சமல்ல, கோடி ரூபாய் நஷ்டமாம்!

சர்க்கார் ஏற்று நடத்த ஆரம்பித்ததும், இவ்வளவு ரூபாய் நஷ்டம் வருகிறதென்றால், முதலாளி கைகொட்டித்தானே சிரிப்பான்! "இப்படியேற்படும் என்று எனக்குத் தெரியும். இதெல்லாம், என்போன்றவர்களால்தான் முடியுமே தவிர, சர்க்காருக்கு இயலுமா?", என்று அவன் பேசினால், என்ன பதிலைக் கூறுவது!

இதே விமானப் போக்குவரத்தினைத் தனிப்பட்ட முதலாளிகளும்தான் நடத்தினர்! அப்போது, கோடிக் கணக்கில் நஷ்டம் வந்ததா? இல்லையே!!

இன்று ஒரு கோடி ரூபாய் நஷ்டம் வருகிறது.

கோடி நஷ்டம் என்றால், அதிலுள்ள ஒவ்வொரு அணா பைசாவும், நாம் செலுத்துகிற வரிதான்.

இவர்களாட்சியில், நல்லதும் பொல்லாததாகிறது. தேசியமயமாக்கும் திட்டம், எவ்வளவு புனிதமும் பொருளாழமும் கொண்டது—'மாடல் சோஷியலிசதாரிகள்' அத்திட்டத்துக்குமன்றோ பழியைக் கொண்டு வருகின்றனர்!

உலக அரங்கில்

அமெரிக்கா

*

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பதவிக்கு மீண்டும் ஐசனேவர் போட்டியிடப்போவதாகச் செய்திவந்துளள இந்தச் சமயத்தில் ஒரு நல்ல தகவலும் கிடைக்கிறது. உலக சமாதானத்துக்கு அறிகுறியாக ஒவ்வொரு நாடும ஆயுதத் தளவாடங்களைக் குறைக்கவேண்டும்என்று கூறப்படுகிறதல்லவா? இதையொட்டி இரஷ்யாவுக்குப் போய் பேச்சு வார்த்தைகளை நடத்தப்போகிருராம் ஐசனேவரின் விசேட ஆலோசகரான ஹரோல்டு ஸ்டாசன். கடந்த ஏப்ரலில் இலண்டனுக்குச் சென்றிருந்த இரஷ்யத் தலைவர்கள் புல்கானினும் குருஷேவும் கூறிய யோசனையை ஒட்டியே, இவர் போகப் போகிருராம். இரஷ்யா என்ருலே சீறிக் கொண்டிருக்கும் அமெரிக்கா செய்திருக்கும் இந்த முடிவு, உலகால், மகிழ்ச்சியோடு வரவேற்கப்படுகிறது.

*

இரஷ்யா

*

புதுமை! புதுமை! — என்று சொல்லுகிருர்கள், பாரசீக மன்னரை, இரஷ்யா வரவேற்றிருப்பது குறித்து. மணிமகுடத்தைச் சாய்த்து, மக்கள் அரசை நாட்டிய இரஷ்யாவில், ஒரு மன்னருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டிருப்பது இதுதான் முதல் தடவையாம். "இரஷ்யாவின் போக்கைப் பார்த்தீர்களா?" என்று கம்யூனிச எதிர்ப்பாளர்கள், கண் சிமிட்டவே செய்வர். எனினும் 'எண்ணெய்க்காகவே' இந்த வரவேற்பே ஒழிய, அவர் மன்னர் என்பதால் அல்ல என்று கம்யூனிஸ்டு நண்பர்கள், பதிலளிக்க முன்வரக்கூடும். கிண்டலும், பதிலும் எப்படியிருப்பினும் குடியரசுத் தலைவர்களின் கரங்களைக் குலுக்கிய குருஷேவ், புல்கானின் ஆகியோரது கரம், இப்போது ஒருமன்னரின் கரத்தையும் குலுக்குகிறது என்பது மட்டும் உண்மை!

*

ஜெர்மனி

*

மேற்கு ஜெர்மனியை ஆளும் அடினூர், நேரு பண்டிதருக்குச் சிறப்பான வரவேற்பளித்ததோடு, காந்தியின் பெயரை ஒரு தெருவுக்கு வைக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார் பதிலளித்து நேருபேசுகையில் கிழக்கு மேற்கு என்று பிரிக்கப்பட்டிருக்கும் ஜெர்மனி, இணைந்து வாழ வேண்டுமென்பதே தன்னுடைய விருப்பம் என்று தெரிவித்துள்ளார். கிழக்கு ஜெர்மனி, இரஷ்யாவின் மேற்பார்வையிலும், மேற்கு ஜெர்மனி அமெரிக்காவின் பார்வையிலும் இருக்கும்படி கடந்த போருக்குப் பின் பிரிக்கப்பட்டது.

*

எகிப்து

*

கடந்த 14ஆம் தேதி எகிப்திலுள்ள ஒரு இராணுவ அதிகாரிக்கு ஒரு பார்சல் வந்ததாம். அதைத் திறக்கும்போது, திடீரென வெடித்து, அந்த அதிகாரியின் கரம் ஒன்று போனதோடு, காலிலும் வயிற்றிலும் படுகாயம் ஏற்பட்டதாம். இந்தச் செயலுக்குக் காரணம், இஸ்ரேலைச் சேர்ந்தவர்களாயிருக்கலாம் என்று கருதப்படுகிறதாம்.

*

மலேயா

*

எவ்வளவுதான் நயமும் பயமும் உபயோகித்தும இன்னும் மலேயாவில் கிளர்ச்சிக்காரர்களின் தொல்லை அடங்கவில்லையல்லவா? அதனுல் பிரதமர் துங்கு, இந்தக் கிழமை புதியதோர் யோசனையை வெளியிட்டுள்ளார். அதன்படி, கிளர்ச்சிக்காரர்களில் எவரெவர் சர்க்காரிடம் வந்து சரணடைகிருர்களோ அவர்களுக்குச் சிறுவுக்குச் செல்ல பணமும் (கிளர்ச்சிக்காரர்களில் பலர் சீனர்கள்) ஓராண்டு காலத்துக்கு அலவன்சும் தரப்படும். இதனுல், ஒவ்வொரு கிளர்ச்சிக்காரருக்கும் மாதாமாதம் சுமார் 150 ரூபாய் கிடைக்கக்கூடும். இந்தக் கிளர்ச்சிக்காரர்களை எதிர்த்து எடுக்கப்படும் போலீஸ் இராணுவ நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு வருடமும் சுமார் 30- கோடி ரூபாய் செலவழிகிறதாம். என்னதான் அதிகமாகக் கணக்கிட்டாலும் 2000 அல்லது 2500-க்குமேல் கிளர்ச்சிக்காரர்கள் இருக்கமாட்டார்கள். அவர்களுக்கு எவ்வளவுதான் அள்ளிக்கொடுத்தாலும் ரூ 36 இலட்சத்துக்குமேல் போகாது! ஆதலால்தான் துங்கு, இவ்விதம் அறிவித்துள்ளார்.

பெண்கள் நிலை

*

பெண்களின் நிலை குறிதது புள்ளிக் கணக்கெடுத்த ஐ. நா, சபையின் கல்விக் கலாச்சார பிரிவினர் உலகில் 15 நாடுகளில் பெண்மணிகளுக்கு வோட்டுரிமை கிடையாது என்று தெரிவிக்கிருர்கள்.

ஆப்கானிஸ்தானம்	ஜோர்தான்
கர்போடியா	லிபியா
ஈராக்	லீச்டென்ஸ்டீன்
பாருவே	நிகரகுவா
சவூதி அரேபியா	பெர்ஷியா
ஏமென்	ஸ்விட்சர்லாந்து
எதியோபியா	லாவோஸ்

சவூதி அரேபியாவிலும், ஏமெனிலும் பெண்களுக்குமட்டுமல்ல ஆண்களுக்கும் ஓட்டுரிமை கிடையாதாம். பெண்ணினத்துக்கு முதன் முதலில் 1893ல் வாக்குரிமை தர முன்வந்த நாடு நியுஜிலாந்தாம் அதையொட்டி முதல் உலகப் பெரும்போருக்கு முன்பு ஆஸ்திரேலியா, பின்லாந்து, நார்வே முதலியவை வாக்குரிமை வழங்கிற்ருும்.

*

குருடர்கள்!

ஒருநாள் பேரரசர் அக்பர் ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு அறிவிற் சிறந்த தம் அமைச்சரான பீர்பலை நோக்கி "நீ ஒரு குருடன்" என்று வேடிக்கையாகச் சொன்னார். உடனே பீர்பல், "வேந்தே! உலகில் பலவிதமான குருடர்கள் உண்டு" என்றார்.

அக்பர், அமைச்சரின் விடைக்கு விளக்கம் கேட்டார். அப்போது பீர்பல்; "குருடர்களில் இரண்டு முக்கிய பிரிவுகள் உண்டு; கண்ணில்லாத குருடர் ஒரு சாரார் கண்களிருந்தும் காணமுடியாத குருடர்; மற்றொருசாரார்; இந்த இரண்டாவது சாரார்களில் செல்வத்தால் குருடானவர்கள், பயத்தால் கண்களை இழந்தவர்கள், பகற் குருடர்கள் போன்ற விநோதமான குருடர்களும் உள்ளனர்" என்றார்.

அக்பர், பீர்பல் கூறிய பலவித குருடர்களுக்குச் சான்றுகள் கூறும்படி கேட்கவே பீர்பல் சில நாட்களில் கூறுவதாகச் சொல்லிச் சென்றார். மறுநாள் பீர்பல் தலைநகரின் சந்தைக் கடைக்குச் சென்று வழியல்லாத ஒரு மூலையில் துணி விரித்து அமர்ந்தார். பீர்பலுக்கறிமுகமான அரண்மனை அலுவல்காரரும் வேறு சிலரும் சந்தைக் கடையைக் கடந்து செல்கையில், பீர்பலை நோக்கி, "நீர் இங்கே என்ன செய்கிறீர்?" என்று வினவினார்கள். பீர்பல் பதில் ஒன்றும் கூறாது, கேட்டவர்களின் பெயர்களை அப்படியே வரிசையாக எழுதிக்கொண்டார்.

சில நாட்கள் கழித்து பீர்பல் கந்தல் ஆடைகள் அணிந்துகொண்டு அரண்மனையில் பெரிய அதிகாரிகளாயிருந்த சில கனவான்களின் இல்லங்களுக்குச் சென்றார். செல்வமும் அதிகாரமும் பெற்ற அவ்வதிகாரிகள், பீர்பலைக் கண்டு, அவர் அக்பருடைய கோபத்திற்கு ஆளாகி அந்தஸ்திலிருந்து தள்ளப்பட்டதாகக் கருதி அவரிடம் முகம் கொடுத்துக்கூட பேசாதிருந்தனர். இன்னும் சிலர் அவரை முறைத்துப் பார்த்து, "நீ யாரென்றே எங்களுக்குத் தெரியாது; போ வெளியே" என்று சொன்னார்கள். பீர்பல் அவ்வதிகாரிகளின் பெயர்களை வரிசையாக எழுதிக்கொண்டார்.

மேலும் சில நாட்கள் கடந்த பின்பு அக்பரின் அரண்மனையில் விருந்து ஒன்று நடைபெற்றது. அதற்கு அரண்மனை அதிகாரிகள் பலரும் வந்து குழுமியிருந்தனர். திடீரென்று மந்திரி பீர்பலும் அவருடைய சில நண்பர்களும், விருந்து மண்டபத்திற்குள் ஓடிவந்து, "அரண்மனையில் தீ! தீ!" என்று உரக்கக் கூவிக்கொண்டே ஒரு திசையில் ஓடினார்கள். உடனே அங்கிருந்த அனைவரும் வாசலை நோக்கி இடித்துத்தள்ளிக்கொண்டு பதைபதைக்க ஓடினார்கள். பயத்தால் ஓடின அவசரத்தில் பலர் பிறர் சப்பாத்துகளை மாற்றி அணிந்துகொண்டு ஓடினார்கள். பிறகு தான பீர்பல் வேடிக்கைக்குச் சொன்னாரென்று அறிந்து ஓடினவர்கள் திரும்பி வந்தார்கள்.

உடனே, பீர்பல், அக்பரை நோக்கி, "இவர்களில் எத்தனைப் பேர் கால் குருடர்கள் என்றறிய ஆசைபபட்டேன்; இதோ பாரும், எத்தனைப்பேர் தங்கள் சப்பாத்தை மாற்றியணிந்துள்ளனர்! இவர்கள் பகற் குருடர்கள் என்று சொல்லுவதே தகும். ஏனென்றால் மெய்யாகத் தீ பிடித்ததா என்று அமைதியாகக் கண்டு பார்க்காமல் பயத்தால் ஓடினார்கள் அல்லவா" எனறார். பிறகு பீர்பல் தான் வரிசையாக எழுதிய சில பெயர்களை அரசருக்குக் காட்டி, "வேந்தே! நான் ஓர்நாள் சந்தைக் கடைக்குச் சென்று தரையில் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருந்தேன். பற்பலர் நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்று பார்த்தும், 'நீர் என்ன செய்கிறீர்?' என்று என்னைப் பார்த்துக் கேட்டார்கள். இவர்களும் ஒருவகையான குருடர்களல்லவா?" என்றார். மேலும் பீர்பல் பல அதிகாரிகளைச் சுட்டிக்காட்டி, அக்பரை நோக்கி "அரசே தயவு செய்து இந்தக் கனவான்களுக்கு, நான் யாரென்று தெரியுமா, என்று கேளுங்கள்!" என்றார். மன்னன் அவ்வதிகாரிகளை நோக்கி பார்த்தபோது, அவர்கள் வெட்கத்தினால் தலை கவிழ்ந்து மௌனமாய் நின்றார்கள். உடனே பீர்பல் அக்பரை நோக்கி "வேந்தே நான் ஒருநாள் கந்தலாடைகளை அணிந்துகொண்டு இவர்களைச் சந்திக்கச் சென்றேன். ஆனால் அவர்கள கண்களுக்கு அப்போது நான் யாரென்று தெரியவில்லை. ஏனென்றால் செல்வம் அவர்கள் கண்களைக் குருடாக்கிவிட்டது!" என்றார். அக்பர் பீர்பலின் அறிவையும் அனுபவத்தையும் தகுந்த சான்றுகளையும் குறித்துப் பெருமகிழ்ச்சி அடைந்தார்.

—D. E. மாசிலாமணி.